GOKULAM

டிசம்பர் 2009 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

• கழுகுக்கு லஞ்ச்!

• ரூ250/- மூன்றாம் பரிசு பெறும் சிறுகதை -1



விளையாட்டில்ல!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1351


1352


1353


1354


1355


1356


1357


1358


1359


1360


1361


1362


1363


1364


1365


1366


1367


1368



1369


1370


1371


1372


1373


1374


1375

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

டிசம்பர் 2009 மலர் : 27 இதழ் : 11

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



கொடுத்துப் பழகுவோம்!

பூக்கள் மணத்தை அளிக்கின்றன. தேனீக்களோ நமக்குத் தேனை அளிக்கின்றன. வாழை மரம் தன்னையே கொடுக்கிறது. வான் மழை வாழ்வின் ஆதாரத்தையே கொடுக்கிறது.

ஆக, கொடைக்குணம் என்பது இயற்கையின் தன்மை!

ஆனால், நாம் பெறுபவர்களாக மட்டுமே இருக்கிறோம்; அது மட்டுமல்ல; அவற்றை மாசுபடுத்துபவர்களாகவும் இருக்கிறோம்.

காட்டுப் பயணத்தில் பிளாஸ்டிக் பொருட்களை வீசுகிறோம்; காற்று மண்டலத்தில் நச்சுப் புகையை அனுப்புகிறோம்; ஆறுகளில் ரசாயனக் கழிவைக் கலக்கிறோம்.

நாம் செய்வதெல்லாம், இயற்கையைக் கெடுக்கும் செயல்கள்; நம்மையே - நம் மனித குலத்தையே -- துன்பத்தில் ஆழ்த்த வல்ல காரியங்கள்! இவற்றின் விளைவை அறியாமல், அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

காடுகளும், அருவியும், இயற்கையின் பெருங்கொடைகள்!

தூய காற்றும், தூய நீரும் அதனால் கிடைக்கும் பெரும்பரிசுகள்!

பரிசுகளைப் பெறும் நாம், அவற்றைக் கொடுப்போரிடம் நன்றியோடிருக்க வேண்டாமா?

அப்படியொரு பரிசு, இந்த மாதம் உலகுக்கும் கிடைத்தது. அது, எல்லாருக்குமான அன்பைப் பேசிய இயேசு பெருமான் அவதாரத் திருநாள்!

அன்றைய தினத்தில் அளிக்கப்படுவதும், பெறப்படுவதும் வெறும் பரிசுகளாக இருக்க வேண்டாம்; உளப்பூர்வமான அன்பாக அமையட்டும். பரிசுகளோடு அன்பையும் கொடுத்துப் பழகுவோம்! அதுதான், அந்த விழாவைப் புரிந்து கொண்டதற்கான அடையாளம்!

அன்புடன்

கோகு

"என்ன வே, ரங்கு நல்லா இருக்கீரா? இதாரு பக்கத்துல?"

புலவர் தனுஷ்கோடி கேட்டவுடன், புன்னகை மிளிரப் பார்த்தார் ரங்கு எனப்படுகிற ரங்கநாதன். அது ஒரு காலம்!

'மரத்துக்கு மரம் தாவி கொய்யாவும் மாம்பழமும் பறிப்பதில் ரங்கு சூரன். அதனால் எல்லாருமே 'உங்கப்பா உனக்கு பேரை சரியாத்தான் வெச்சிருக்காரு. முன்னாலயும் ஒரு 'கு' இருந்திருந்தா, இன்னும் பொருத்தமா இருக்கும்' என கிண்டலடிப்பார்கள். அதற்காகவே, 'ரங்கு' 'ரங்கு' என்று கூப்பிடுவார்கள்.

ரங்கு அதை நினைத்துச் சிரிப்பதைப் புரிந்து கொண்டார் தனுஷ்கோடி.

"என்ன, பழைய நினைப்புல சிரிக்கீரா? தம்பி யாரு?"

"ம், இவரு ரமேஷ். எம்.ஃபில். பண்ணிட்டிருக்காரு. விடுகதைகள் பத்தின கட்டுரை எழுதப் போறாரு. சரி; உம்மையும் பாக்கட்டுமேன்னு கூட்டி வந்தேன்."

அந்த இளைஞனை ஏற இறங்கப் பார்த்த புலவர், "வாரும், வீட்டுக்குப்

பொத்தல்



போகலாம்" என்று நடந்தார். வெளித் திண்ணையில் அமர்ந்தவுடன் புலவர் சொன்னார் :

"பிள்ளைகள் விளையாடற மாதிரி ஒரு விடுகதை முதல்ல சொல்றேன்."

"பெட்டியைத் திறந்தான். கிருஷ்ணன் பிறந்தான் - அது என்ன?" என்ற புலவரே தொடர்ந்து பேசினார்.

"மணிலாக்கொட்டை. மணிலாப் பயறை (வேர்க் கடலை) கிருஷ்ணனா உருவகப்படுத்திச் சொல்றது. ஆனா, விடு

சுகுணா

தமிழமுது

கதைன்றது தனியா மட்டும் இல்ல; சிலது நாடோடிப் பாட்டுலயே இருக்கு. அப்படி ஒண்ணு சொல்றேன். புரியுதா பாருங்க...

அத்திப் புரத்துக்கும்
பொத்தல் கரத்துக்கும்
ஆயிரம் காதமாம் தூரமடி - மனம்
ஒத்து அழைக்கவே
புத்தம் புதியதாய்
ஆயிரம் வண்ணங்கள் சுரந்ததடி.

கரம்?

புலவர் சொன்னதும், அந்த இளைஞன் மட்டுமல்ல; ரங்கநாதனும் விழித்தார்.

"என்னவே முழிக்கே? எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம் தான். வார்த்தையைக் கவனியும் புரிஞ்சுடும்," என்ற புலவர் தொடர்ந்து பேசினார்:

"மகாபாரதக் கதைதான் இது. 'அத்திப்புரம்'னா அஸ்தினாபுரம். 'பொத்தல்'னா துவாரம். 'கரம்'னா கை. அதாவது துவாரகை. அஸ்தினாபுரத்துல திரௌபதியை அவமானப்படுத்தினபோது, துவாரகைல இருந்தே கண்ணன், புதுப்புது சேலைகள் வளரச் செய்தான். பாரதி சொல்வாரே:

'வண்ணப் பொற்சேலைகளாம் - அவை வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே'ன்னு அதைத்தான் சொல்லுது இந்த நாட்டுப் புறப்பாட்டு!'

கேட்ட இளைஞனும், ரங்கநாதனும் வியந்தார்கள்.

"பாஞ்சாலி சபதம் முழுக்க இதுக்குள்ளே முடிஞ்சுடுச்சே" என்று, குதூகலமாய்ச் சொன்னான் அந்த இளைஞன்.

புலவர் சொன்னார் : "ஒரு வாரம் இங்க தங்கு. நிறைய சொல்லுதேன். இப்படி ஏராளமா இருக்கு தமிழ்ல."

இளைஞன் உற்சாகமாய்த் தலையசைத்தான். ●

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

விளையாட்டில்ல!



கேரம் போர்டு, செஸ், டென்னிஸ், கிரிக்கெட்... என்று குழந்தைகளின் விளையாட்டு உலகம், இன்று மாற்றம் பெற்று விட்டது. டிவி.யில் வரும் டோரா, மிஸ்டர் பீன்... போன்றவை, குழந்தைகளின் எஞ்சிய நேரத்தை எடுத்துக் கொண்டு விட்டன. அதனால், நம்முடைய பழைமையான விளையாட்டுகள் பலவும் குழந்தைகளுக்குத் தெரியவேயில்லை.


தாயம், பல்லாங்குழி, பாண்டி, கல்லாங்காய்... இப்படி மறைந்து கொண்டிருக்கும் விளையாட்டுகள் பல. இவை வெறும் விளையாட்டு, பொழுதுபோக்கு மட்டும் தானா என்றால், நிச்சயமாக இல்லை.

உதாரணமாக, பல்லாங்குழி என்றால், இரண்டு பேர் விளையாடுவார்கள், நடுவில் உள்ள பலகையில், பதினான்கு குழிகள் இருக்கும். புளியங்கொட்டைகளைக் கொண்டு ஒன்று இரண்டு என்று எண்ணியபடி அதில் போட்டு விளையாடுவார்கள். ஒரு குழிக்குப் பன்னிரண்டு காய்கள் (புளியங்கொட்டைகள்) என்று கணக்கிட்டுப் போட்டு விளையாடுவார்கள்.


இந்த விளையாட்டில், மனக்கணக்காக எந்தக் குழியில் இருந்து எடுத்துக் கணக்கிட்டால், அதிகமான காய்களைச் சேகரிக்க



முடியும் என்பது விளையாட்டின் சூட்சுமம்!



இதையே குழிக்கு ஐந்து காய்கள் என்றும் போட்டு விளையாடுவதுண்டு. பார்வைக்கு வெறும் அதிர்ஷ்டம் என்று தோன்றினாலும், கவனித்து விளையாடினால் அந்த விளையாட்டில் உள்ள கணித சூட்சுமம் புலப்படும்.



கலர் ஸ்டோரி

அட்டையில்:
ரோஷ்னி.
அஸ்வின்
வண்ணப்படம்:
ஸ்ரீஹரி

தாயம், கல்லாங்காய், பாண்டி போன்ற விளையாட்டுகளும் இப்படித்தான் ஏதேனும் ஓர் ஆற்றலை தூண்டுகின்றன.

தாயம் விளையாட்டு, கவனத்தையும் எச்சரிக்கையையும் காட்டும் விளையாட்டு. எந்தக் காய் வெட்டுப்படும் நிலையில் இருக்கிறது என்பதையும், எந்தக் காயை நகர்த்தினால் வெட்ட முடியும் என்பதையும் ஒரே சமயத்தில் நிர்ணயிக்க வேண்டும். அதற்கேற்ப காய்களை நகர்த்தி வெற்றிபெற வேண்டும்.

பாண்டி என்பது உடல், மனம் இரண்டும் ஒருமிக்க வேண்டிய ஒன்று. கல்லாங்காய் என்பது கவனம் சிதறாமல் கையும் விழியும் சேர்ந்து இயங்க வேண்டிய விளையாட்டு!

மேலோட்டமாகப் பார்க்கும் போது, இவையெல்லாம் பொழுது போக்குள் அல்லது விளையாட்டுகள் என்றுதான் தோன்றும். ஆனால், இவை வாழ்வுக்கு அவசியமான சில குணங்களை மெருகேற்றுகின்றன.

கூர்ந்த கவனம், தெளிவான யோசனை, மன ஒருமைப்பாடு போன்றவை, மனித வாழ்வில் ஒவ்வொருவருக்கும் அவசியம்!


அந்த குணக்கூறுகளை வளர்க்கின்ற தன்மை, இந்த விளையாட்டுகளுக்கு உண்டு.

நீங்களும் இவற்றைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். ஏனெனில், இவை வெறும் விளையாட்டில்லை!

- ராகவன்



* வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன்



"நான் இயற்பியல் பட்டதாரியாகத்தான் பி.ஹெச்.டி. ஆய்வைத் தொடங்கினேன். ஆனால் அந்தப் பணி அவ்வளவாக சுவாரஸ்யம் இல்லாததாகத் தோன்றியது. நிறைய இயற்பியலாளர்கள் உயிரியல் துறைக்குச் சென்று வெற்றியடைந்திருப்பதை அறிந்தேன். நானும் அப்படி மாறிவிடலாமென்று அவர்களின் வெற்றியைப் பார்த்துத்தான் முடிவு செய்தேன்" - இவ்வாறு கூறியிருப்பவர் 2009ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல்

ரிபோசோம் ரகசியங்கள் அம்பலம்!


நோபல்



* சர்.சி.வி. ராமன்

ஆல்ஃப்ரட் நோபல் என்பவர் நிறுவிய நோபல் ஃபவுண்டேஷன் வாயிலாக, 1901 முதல் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதிக்கென ஆண்டுதோறும் விருதுகள் தரப்படுகின்றன. பொருளாதாரத்துக்கென 1968 முதல் நோபல் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

* சந்திரசேகர்



பல்வேறு துறைகளுக்கான நோபல் பரிசு வென்றுள்ள இந்தியர்களைப் பற்றித் தெரிஞ்சுக்க ஆசையா இருக்குமே...

விருது

பரிசை வென்றுள்ள மூவரில் ஒருவரான வெங்கட்ராமன் ராம கிருஷ்ணன்.

தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் 1952ல் பிறந்தவர், 'வெங்கி' என நண்பர்களால் அழைக்கப்படும் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன். பரோடா பல்கலைக் கழகத்தில் இளங்கலை இயற்பியல் பயின்றவர். யு.எஸ்.ஸில் ஒஹையோ பல்கலைக் கழகத்தில் இயற்பியலில் டாக்டர் பட்டம் பெற்றார். அதன் பிறகுதான் உயிரியலின்மீது இவரது ஆர்வம் திரும்பியது.

உயிர்ச் செல்களின் அடிப்



* ஆராய்ச்சிக் கூடத்தில் நண்பர்களுடன்

கார்த்திகா

இந்தியர்கள்!




* ஹர்கோபிந்த் குரானா

நோபல் பரிசை வென்ற முதல் இந்தியர் ரபீந்த்ரநாத் தாகூர். இவர் எழுதிய 'கீதாஞ்சலி'யின் ஆங்கில மொழி பெயர்ப்பான 'சாங் ஆஃபரிங்ஸ்' (Song Offerings) இலக்கிய உலகில் பரவலாக வரவேற்பைப் பெற்றது. இலக்கியத்துக்கென 1913ல் இவர் நோபல் வென்றார்.


1930ம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றவர் சந்திரசேகர வெங்கடராமன். (அட, நம்ம சர்.சி.வி. ராமன்தான்!) ஒளியைப் பற்றிய இவரது ஆய்வுக்குப் பரிசு கிடைத்தது.

பின்னாளில் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற இந்தியரான ஹர்கோபிந்த் குரானா, மருத்துவத்துக்கான நோபலை 1968ல் பெற்றார். ஜீன்கள் பற்றிய ஆய்வுக்கான இவ்விருதை வேறு இரு விஞ்ஞானிகள் இவருடன் இணைந்து பெற்றனர்.

1983ல் இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றவர் சுப்ரமணியன் சந்திரசேகர். இவர் சர்.சி.வி.இராமனின் உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



* Ada E.Yonath



* Thomas A.Steitz

படையான டி.என்.ஏ. மூலக்கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளன, இயங்குகின்றன என்பதைத் தெரிந்துகொள்வது மனித உடலின் அதிசய அமைப்பையே புரிந்து கொள்ள உதவும். அந்த டி.என்.ஏ. மூலக் கூறுகளில் காணப்படும். ரிபோசோம்களைக் (ribosomes) குறித்த இவரது ஆய்வுக்குத்தான் வேதியியல் பிரிவின் கீழ் நோபல் பரிசு கிடைத்துள்ளது. இவருடன் Thomas A.Steitz, Ada E.Yonath என்ற இரு விஞ் ஞானிகள் இவ்விருதைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

டி.என்.ஏ மூலக்கூறுகளில் காணப்படும் ரிபோசோம்களைக் குறித்த ஆய்வுக்குத்தான் இவருக்கு நோபல் பரிசு கிடைத்துள்ளது.


"ரிபோசோம்களின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்வது, வாழ்க்கையை அறிவியல்பூர்வமாகப் புரிந்து கொள்ள உதவும்" என்கிறார் வெங்கி. நோபல் பரிசை வென்றவர் சொன்னால் சரியாதான் இருக்கும்... இல்லையா?

1979ல் அமைதிக்கான நோபல் பரிசை வென்றவர் அன்னை தெரசா. பிறப்பால் இந்தியர் இல்லாவிடினும், இந்தியக் குடியுரிமை பெற்று வாழ்ந்தவர். கொல்கத்தாவில் ஏழைகள் மற்றும் நோயாளிகளுக்குத் தொண்டு செய்யவே தம் வாழ்நாளை அர்ப்பணித்தார்.



* ரபீந்த்ரநாத் தாகூர்

பொருளாதாரத்துக்கான நோபல் நினைவு விருதை 1998ல் அமர்த்தியா சென் வென்றார்.



* அமர்த்தியா சென்

டிரினிடாடில் வசித்து வரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வி.எஸ்.நைபால் 2001ல் இலக்கியத்துக்கான நோபல், பரிசை வென்றார்.

இப்படி நோபல் பரிசுக்கான அனைத்துத் துறைகளிலும் இந்தியர்கள் விருது பெற்றுள்ளனர். இது நமக்கும் பெருமைதானே!

டியர் குட்டீஸ் ...

உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராக குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.


● பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 32



வேலனின் சாதுர்யம்!

கதை: எம்.எஸ். ஷண்முகப்ரியா. உ.எண்:622.சேலம்.

படம்: பிள்ளை.




வேலனை அழைத்து...
அந்தக் குடத்தில் இருந்ததை நீ பருகினாயா?
ஆம் அரசே, நான்தான் பருகி னேன்.
என்ன துணிச்சல்? மர ணத்தை விலக்கும் அமு தத்தை நீ பருகியுள்ளாய்.
நிஜமாக மரணத்தைப் போக்குமா?
கேள்வியா கேட்கிறாய். முட்டாள்.. உனக்கு மரண தண்டனை விதிக்கிறேன்.
ஹா... ஹா... ஹா...
ஏன் சிரிக்கிறாய்?
உங்கள் ஆணையை நிறைவேற்ற முடியாதே.
ஏன் முடியாது?
சாப்பிட்டது அமுதம் என்றால், நான் சாக மாட்டேன்.
நான் சாப்பிட்டது அமுதம் இல்லை எனில் உங்கள் தண்டனையால் இறப்பேன். அப்போது செய்யாத குற்றத்துக்கு என்னை தண்டித்தவராகி விடுவீர்கள்!
அட, ஆமாம்!
நீ சொல்வது நிஜம்தான். உன்னை விடுதலை செய்கிறேன்..
தங்கள் கருணைக்கு மிகவும் நன்றி!

குளிர்கால

டாக்டர் கு.கணேசன்



மழைக்காலம் முடிந்ததும் குளிர் காலம் தொடங்கிவிடும். குளிர் காலத்தில் உண்டாகும் பல நோய்கள் குழந்தைகளை எளிதில் தாக்கக் கூடியவை...

சுவாச மண்டல நோய்கள்

குளிர்காலத்தில் வரும் நோய்கள் பெரும்பாலும் வைரஸ் கிருமிகளால் உண்டாகின்றன. அவை முக்கியமாக சுவாச மண்டலத்தையே தாக்குகின்றன. இதனால், குழந்தையின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து, பாக்டீரியா தொற்றும் ஏற்படுகிறது. இதன் விளைவாக குழந்தைகள் பல தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர்.

குழந்தைகள் குளிர்ந்த காற்றைச் சுவாசிக்கும் போது ஜலதோஷம், தும்மல், மூக்கடைப்பு போன்றவை ஏற்படுவது வழக்கம். இதனால் அவர்கள் வாய்வழி சுவாசிப்பார்கள். விளைவு, மூச்சுக் குழாய்க்குள் கிருமிகள் எளிதில் நுழைந்து விடும்.

சளி பிடிப்பது எப்படி?

நுரையீரல் தனக்கே உரிய எதிர்ப்பு சக்திகள் மூலம் கிருமிகளை எதிர்த்துப் போராடும் என்றாலும், நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த குழந்தைகளுக்கு, கிருமிகளின் ஆக்ரமிப்பு அதிகமாகிவிடும். அப்போது மூச்சுக் குழாய்க்குள் அழற்சி உண்டாவதால், அங்கு நீர் கோத்து சளி பிடிக்கும். காய்ச்சல், இருமல் வரும். இதற்கு 'பிராங்கைட்டிஸ்' என்று பெயர்.

பொதுவாக இந்தத் தொந்தரவு ஒரு வாரம் வரை நீடிக்கும். இது சாதாரண தொந்தரவுதான். ஆபத்து வராது. இந்த நோயுள்ள குழந்தைக்கு அடிக்கடி வெந்நீர் தர வேண்டும். சத்துள்ள உணவுகளை வெதுவெதுப்பாகக் கொடுக்க வேண்டும். நீராவி பிடிக்க வேண்டும். இவற்றுடன் தகுந்த மருத்துவச் சிகிச்சையையும் பெற்று விட்டால், நோய் குணமாகிவிடும்.

நிமோனியா காய்ச்சல்

நோய்க் கிருமிகள் நுரையீரலை பாதிக்கு

டாக்டர் பக்கம்

நோய்கள்!

மானால் நிமோனியா காய்ச்சலாக மாறி விடும். மார்பில் சளி சேர்ந்து, அதிக காய்ச்சல், மூச்சிரைப்பு, வாந்தி என்று தொல்லைகள் தொடர்ந்து, ஆபத்தை அதிகமாக்கும். வீட்டில் உள்ள மற்ற குழந்தைகளுக்கும் நோய் பரவும்.

பச்சிளங் குழந்தைகளுக்கு, குளிர் தாங்க முடியாமல் மூச்சுச் சிற்றறைகள் வீங்கி அடைத்துக் கொள்ளும். இதனால் மூச்சிரைப்பு மிக அதிகமாக இருக்கும். 'பிராங்கியோலைட்டிஸ்' என்று அழைக்கப்படுகின்ற இந்நோய் சற்றே ஆபத்தானது. ஆகவே குழந்தைகளுக்கு சளி, இருமல் பிடிக்கும்போது, உடனடியாக சிகிச்சை பெற்று விடுவது நல்லது.

காதுவலி

குளிர்காலத்தில் மூக்கடைப்பை நீடிக்க விடக்கூடாது. அப்படி நீடித்தால் தொண்டைக்கும் காதுக்கும் இடையில் உள்ள 'காது-தொண்டை இணைப்புக் குழாய்' அடைபட்டு காதுவலி வந்துவிடும். இந்தக் காதுவலி இரவு நேரத்தில்தான் அதிகம் தொல்லை கொடுக்கும். அதுமட்டுமின்றி, சைனஸ் தொந்தரவும் இதனுடன் சேர்ந்து கொள்ள, தலைவலி வரும்.

ஆஸ்துமா

இந்நோய் ஏற்பட்ட குழந்தைகள் சுவாசிக்க சிரமப்படும். மூச்சிரைப்பு உண்டாகும். மார்பில் 'விசில்' சத்தம் கேட்கும். குறிப்பாக இரவில் இச்சத்தம் அதிகமாக இருக்கும். சில குழந்தைகளுக்கு இரைப்பு இருக்காது. பதிலாக, இடைவிடாத இருமல் இருக்கும்.

பொதுவாக பரம்பரைத் தன்மையும் ஒவ்வாமையும்தான் ஆஸ்துமா ஏற்பட முக்கியக் காரணங்கள். என்றாலும் குளிர் காலத்தில் நிலவுகின்ற சீதோஷ்ணநிலை இந்நோயை எளிதில் வரவேற்கும்; அதிகமாக்கும்.

இதற்கான காரணங்கள் குழந்தைக்குக் குழந்தை மாறுபடும். ஐஸ்கிரீம், குளிர் பானங்கள் போன்ற குளிர்ச்சியான உணவுப் பொருள்கள் மற்றும் ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை போன்ற புளிப்பான பழங்களைச் சாப்பிடுதல், தலைக்குத் தண்ணீர் ஊற்றுதல், வீட்டில் உள்ள தூசு, வீட்டு வளர்ப்புப் பிராணிகளின் உரோமம், காற்றோட்டம் இல்லாத சூழல் போன்றவை ஆஸ்துமாவை அதிகரிக்கும்.

ஆஸ்துமாவைக் குணப்படுத்த இப்போது ஸ்பேசர், இன்ஹேலர், ரோட்டா ஹேலர், நெபுலைசர் போன்ற பல கருவிகள் வந்துள்ளன. இவற்றின் உதவியுடன்



குறைந்த அளவில் மருந்துகளை நேரடியாக நுரையீரலுக்குள் சுவாசிக்கச் செய்து, ஆஸ்துமாவை வேகமாகக் கட்டுப்படுத்த முடியும்.

எப்படித் தடுக்கலாம்?

குளிர்காலத்தில் அதிகாலையில் குழந்தைகள் வெளியில் போகக் கூடாது. பனி விழும் நேரத்தில் விளையாடக் கூடாது. அப்படி வெளியில் செல்ல நேர்ந் தால், காதை மறைக் கின்ற அளவுக்கு மஃப்ளர் அணிந்து கொள்ள வேண்டும்.

வெதுவெதுப்பான தண் ணீரில் குளிக்க வேண்டும். இளஞ்சூடாக உணவுகளை உண்ண வேண்டும். ஒவ்வாமை உணவுகளை அவசியம் தவிர்க்க வேண்டும். வீட்டில் ஈரம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



வீட்டில் ஜன்னல், கதவுகளை பகலிலா வது திறந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் காற்றில் கலந்திருக் கும் கிருமிகள் வெளியேற வழி கிடைக்கும்.

சுவாச மண்டலத்தை வலுப் படுத்த உதவும் 'பிராணாயாமம்' போன்ற மூச்சுப்பயிற்சிகள் மற்றும் யோகாசனப் பயிற்சி களை சிறு வயதிலிருந்தே குழந்தைளுக்குக் கற்பிக்கலாம். முளை கட்டிய பயறுகள், நார்ச்சத்து நிறைந்த கீரை கள் மற்றும் பழங்களைக் கொடுத்து, நோய் எதிர்ப் புச் சக்தியை அதிகப்படுத்த வேண்டும். ●



வாழ்த்துகள்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 28ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி யிருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை, குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1) ஸ்லாத், 2) ராக்ஸ் அரோமா, 3) வில்லியம் காங்கிரீவ், 4) அலாஸ்கா, 5) அபாரமான ஆட்சியாளர்

பரிசு பெறுவோர் :

1) எச்.ஒய்.கௌரவ், ஹாசன், 2) எம்.லோகேஷ் மதன், பூம்புகார், 3) வி.ஆர்.வர்ஷினி, கும்பகோணம், 4) ச.ஜனகவல்லி, திருப்பூர், 5) மு.முகமது அமீர், உளுந்தூர்பேட்டை, 6) ம.அக்ஷயா, அரூர், 7) கா.அட்சயா, புதுகை 8) தேவமலர், மலேசியா 9) மு.சோமேஷ்வர், கோவை, 10) ர.ஸ்ரீநிதி, இராணிப்பேட்டை

தெரியுமா?

1.மிகவும் புகழ்வாய்ந்த பொறியியல் வல்லுனர். 15.09.1861ஆம் ஆண்டு பிறந்தவர்.

2. இவர் பெற்றோர் சீனிவாச சாஸ்திரி, வேங்கடலக்ஷ்மி அம்மையார்.

3. மைசூரில் ஆரம்பக் கல்வி கற்ற இவர், பெங்களூர் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றார்.

4. நாட்டின் வளர்ச்சிப் பணிக்காக தானியங்கி மதகு ஒன்றினைக் கண்டுணர்ந்தார்.

5. இந்த மதகு முதன் முதலாக 'கடக் வாங்கா' என்ற அணைக்கட்டில் பொருத்தப்பட்டது. இதற்குப் பிறகு, கிருஷ்ணராஜசாகரில் பொருத்தப்பட்டது.

6. நிஜாம் அரசு ஹைதராபாத் நகரை அழகுபடுத்த இவருக்கு அழைப்பு விடுத்தது. வெள்ளத்திலிருந்து அந்த நகரினைக் காத்தார்.

7. 'பாங்க் ஆப் மைசூர்' உருவாகக் காரணமாக இருந்தவர் இவர்.

8. பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை இவர்தம் முயற்சியினால் உருவானது.

9. இவரது பணிகளைப் பாராட்டி, பல்வேறு பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தன.

10. 1955ஆம் ஆண்டு, இந்தியாவின் மிக உயர்ந்த பாரத ரத்னா விருது பெற்ற இவர், 14.4.1962ஆம் ஆண்டு மறைந்தார்.

- கே.அனுசுயா,
மன்னார்குடி



தானியங்கி மதகு!

சிரிப்பலை

"என்ன டிரைவர் சிரிக்கிறீங்க."

"என்னை நம்பி இவ்வளவு பேர் வர்றதை நினைச்சுத்தான்."

- எஸ்.சுப்ரியா, உ. எண் 79, சென்னை



"உங்க ஊர்ல ஆறு, கோயில் இருக்கா?"


"இல்லடா ஒரே கோயில்தான் இருக்கு."


- ஆர்.அருண்குமார், உ. எண் 950, திருநெல்வேலி

"ஆபரேஷன் பண்ணினதுல இருந்து தும்மலா வருது."

"அட, என் பொடி டப்பா உங்க வயித்துலதான் இருக்கா?"

- சு.ஸ்வேதா, உ. எண் 8, தேனி





'சேமி'யா வருத்தம்!

"பத்து வருஷம் வியாபாரம் பண்ணியும் என்னால் நூறு ரூபாய் கூட சேமிக்க முடியலை."

"என்ன வியாபாரம் பண்றீங்க?"

"*சேமியா* வியாபாரம்தான்."

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி



தேடிவரும் கோகுலம்;
படிக்கப் படிக்க...



குதூகலம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

கல்யாணப் பெண்ணுக்கு பட்டுப் புடைவை எடுத்துக் கொடுப்பது வழக்கம். ஆனால் நியூஸ் பேப்பர்ல செஞ்ச கல்யாண டிரஸ் எடுத்துக் கொடுத்தா எப்படி இருக்கும்? சீன மணப்பெண் ஷாஷா தான் காகிதத்தாலான டிரஸ் போட்டுத் திருமண விழாவையே கலக்கியிருக்காங்க. இந்த ஆடையைத் தயாரித்தவர் அவருடைய நீண்ட நாள் நண்பர் சூசூ. ஒரே மாதிரியான ஆடைகளை வடிவமைத்து போரடித்துப் போனதால், இந்த முடிவை எடுத்தாராம்! இந்த ஆடை பருத்திக் காகிதம் மற்றும் வெள்ளி இழைகளால் ஆனது. இதைத் தயாரிக்க இரண்டு மாதங்கள் ஆகின. சூரிய ஒளி பட்டபோது ஆடை ஜொலி ஜொலித்ததாம். ஆறு தோழிகள் சூழ மணப்பெண் ஷாஷா மணமகன் மிஸ்டர் லீயைக் கரம் பிடித்தாராம்! அவங்க போட்டிருந்த நியூஸ் பேப்பர் டிரஸ்ல தலைப்புச் செய்தி திருமணம்தானே!



காகிதத்தில்,



கிறிஸ்துமஸ் விழாவில் குழந்தைகளைப் பெரிதும் கவர்பவர்கள் கிறிஸ்துமஸ் தாத்தாக்கள்தான். ருமேனியாவில் 2008ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின்போது, 3939 கிறிஸ்துமஸ் தாத்தாக்கள் சாலையில் அணிவகுத்து வந்தனர். அதாவது, கிறிஸ்துமஸ் தாத்தா எனப்படும் சான்டா கிளாஸ் வேடமணிந்து வந்தவர்கள்! மேலும், இந்த விழாவைப் பற்றி புக்காரெஸ்ட் மேயர் ஷோரின் ஒப்ரஸ்கு என்பவர் கூறுபோது, "கிறிஸ்துமஸ் தாத்தாக்கள் ஆயிரக்கணக்கில் வந்தது அதிசயம்தான். அதேபோல 459 அடி உயர அதிசய கேக் ஒன்றையும் தயாரித்தோம்" எனத் தெரிவித்துள்ளார். இது உலகச் சாதனையாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

எல்லாரும் அரிசி, குச்சி, சாக்பீஸ், சிப்பி, ஓலை எனப் பல பொருள்களில் கலைப் பொருட்கள் செய்வதைப் பார்த்திருப் போம். ஆனால், பீஜிங்கில் உள்ள சிகை அலங்காரக் கலைஞர் ஹூவாங் சின், தம்முடைய கடையில் சேருகின்ற தலை முடியைக் கொண்டு, தியானமென் சதுக்கத் தையும், கோபுரத்தையும் அழகாக வடி வமைத்துள்ளார். 2 அடி 10 இஞ்ச்கள் நீளமும் 1 அடி அகலமும் 11 கிலோ கிராம் எடையும் கொண்டதாக இதை உருவாக்கியுள்ளார். அனைவராலும் பாராட்டுப் பெற்ற இவர், இதற்கு



கல்யாண உடை!

முன் சீன ஒலிம்பிக் ஸ்டேடியமான பறவைக் கூட்டையும் தலைமுடியைக் கொண்டு வடிவமைத்தவர்!

உலகிலேயே நீளமான மோட்டார் பைக் பிரிட்டனில் உருவாக்கப்பட் டுள்ளது. இதை 'காலின் புர்ஸே' என்ற 29 வயது இளைஞர் தயாரித்துள்ளார். இவர் பிளம்பிங் வேலை செய்பவர். இரண்டு மாதங்கள் கடுமையாகப் பணியாற்றி, இந்த 46 அடி நீள மோட்டார் பைக்கை வடிவமைத்துள்ளார். தம்முடைய வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்தில் இந்த பைக்கை தயாரித் துள்ள புர்ஸே, தமது 29 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக, இந்தச் சாதனையைச் செய்துள் ளாராம். இதுவும் கின்னஸ் சாதனை.





வளர்கவி

வானைத் தொடுகிற அளவுக்கு
வளர்ந்த ஆல மரத்தடியில்
கூனல் முதுகு கொண்டவொரு
குடுகுடுக் கிழவி வடைசுட்டாள்!

மேலே இருந்து பார்த்திருந்த
மெலிந்த காகம் கீழிறங்கி
ஆல மரத்தடிப் பாட்டியிடம்
அண்டி நின்றது வடைகேட்டு!
பாட்டி வடையைத் தரவில்லை;
பார்த்த காகம் விடவில்லை!
மூட்டிய அடுப்பின் விறகுக்காய்
முள்ளுச் சுள்ளிகள் பொறுக்கிவந்து,

பாட்டி அருகே போட்டுவிட்டுப்
பணிவாய் நின்றது பசியோடு!
பாட்டி நல்லவள்; காகத்தின்
பணியை மெச்சி வடைதந்தாள்!



மனம் மாறிய நரி!



வடையைக் கவ்வி அப்பால்போய்
வளர்ந்த வேறொரு மரக்கிளையின்
இடையே இருந்த குஞ்சுக்கு
இரையாய்த் தந்திட எண்ணியது!


கீழே அங்கோர் கிழநரியும்
''ஏலேய்! வடையைப் போடென்று!''
மேலே இருந்த காகத்தை
மிரட்டிக் கேட்டது உக்கிரமாய்!

காகம் அதற்கு அஞ்சாமல்
கீழே பார்த்து நரியிடத்து
'உழைத்துப் பெற்றேன் இவ்வடையை
உருட்டல், மிரட்டல் வேண்டாமே!

நீயும் போவாய்; பாட்டியிடம்
நெருப்பு எரிக்க விறகெடுத்துப்
போட்டால் தருவாள் வடையொன்று
பொக்கைக் கிழவி உனக்கென்று''

என்றே காகம் சொல்லியதாம்!
ஏற்றுக் கொண்டு மனம்மாறி,
உழைத்து உண்பதே உயர்வென்று
உணர்ந்து சென்றதாம் குள்ளநரி!

அவள் பெயர் அபி!



அபி பதினொராம் வகுப்பு படிக்கும் மாணவி. மிகவும் புத்திசாலி படிப்பில் கெட்டிக்காரி. இவை அனைத்தையும்விட மிகவும் இளகிய மனம் கொண்டவள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, இரவு எட்டரை மணிக்கு படிக்க உட்கார்ந்தாள். ஆர்வமாகப் படித்துக் கொண்டே இருந்தவளுக்கு திடீரென அதிர்ச்சியாகிவிட்டது. கடிகாரத்தில் முட்கள் இரண்டும் பன்னிரண்டைத் தொட்டு இருந்தன. 'இவ்வளவு நேரமாகவா நான் படித்தேன்' எனத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு படுக்கைக்குச் சென்று உறங்கிவிட்டாள்.

காலையில் அவசர அவசரமாகப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தாள். வழியில் கண் தெரியாத ஒருவரைப் பார்த்தாள். பார்ப்பதற்கு படித்தவர் போலவும், நல்லவர் போலவும் காட்சியளித்த அவர், மிகவும் தடுமாற்றத்துடன் நடந்து கொண்டிருந்தார். அபி ஒரு நிமிடம் யோசித்தாள், 'அவர் செல்ல விரும்பும் இடத்துக்கு, நாம் கொண்டு விடலாமா? பிறகு பள்ளிக்குச் செல்லலாமா?' என்று.

ஆனால் மறுபக்கம் 'நமக்கே பள்ளிக்கு நேரமாகிவிட்டது. இதில் சேவை வேறு செய்ய வேண்டுமா' என்று எண்ணி, அவரைத் தாண்டி பத்து அடி நடந்தாள். 'சடார்' என சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தவளுக்கு, தொப்பென்று தூக்கிப் போட்டது. ஆம்; அந்தக் கண் தெரியாதவர் மீது கார் ஒன்று

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா
நினைவுச்சிறுகதைப் போட்டியில்
மூன்றாம் பரிசு
ரூ.250/- பெறும் சிறுகதை -1


மோதி, ரத்தக் காயத்துடன் துடித்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த அடுத்த நிமிடமே அபி அங்கேயே மயங்கி விழுந்தாள்.

'அபி பள்ளிக்கு நேரமாயிடுச்சு எழுந்திரு.' தன் தாயின் குரலைக் கேட்டு, விழித்துக் கொண்டாள் அபி. பிறகுதான் தெரிந்தது, நடந்தது எல்லாம் கனவென்று. 'அப்பா! என்ன ஒரு கனவு!' முணுமுணுத்துக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தாள்.

காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு பள்ளிக்குத் தயாராகி, வீட்டைவிட்டுக் கிளம்பி ஒன்பது மணியாகிவிட்டது. 9.15க்கு முதல் வகுப்பு ஆரம்பிக்கிறது. கால் மணி நேரத்தில் போய்விட லாம் என்ற தைரியத்தில் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தாள்.

சாலையில் நடந்து கொண்டிருந்தவளுக்கு திடீரென அதிர்ச்சி! வழியில், தான் கனவில் கண்டதைப் போலவே, கண் தெரியாத ஒருவரைப் பார்த்தாள். சற்றும் யோசிக்காமல், அவரிடம் சென்று, ''ஐயா! நீங்கள் எங்கே செல்ல வேண்டும்?'' என்றாள். அவர், ''நான் சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளிக்குச் செல்ல வேண்டும்'' என்றார். ''நானும் அங்குதான் செல்கிறேன். என்னுடன் வாருங்கள்'' என்றாள் அபி.

அவர் கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்தாள். வழியில் அவர், ''உன்



ஏ.ரகுபதி .
பத்தாம் வகுப்பு,
சாரதா
மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி.

பெயர் என்ன? எந்த வகுப்பு படிக்கின்றாய்?'' என அபியிடம் கேட்டார்.

''என் பெயர் அபிராமி. நான் பதினொராம் வகுப்பு படிக்கிறேன்'' என்றாள் பதிலுக்கு.

பள்ளி வரை அவரை அழைத்துக் கொண்டு வந்தவள், பள்ளிக்குள் நுழைந்தவுடன், ''ஐயா! எனக்கு வகுப்புக்கு நேரமாகிவிட்டது. இன்று எங்களுக்குப்



அபிக்கு ஆச்சரியமாகிவிட்டது. அந்தப் புதிய ஆசிரியர் வேறு யாருமில்லை... அபி பள்ளிவரை அழைத்து வந்தவர்தான்.

புதிய வகுப்பாசிரியர் வருகின்றார்'' எனக் கூறினாள். அவர் பதிலுக்கு ''நன்றி'' சொன்னார். ''பரவாயில்லை ஐயா!'' எனக் கூறி விரைந்து நடந்து வகுப்புக்குச் சென்றாள். 'அப்பா! இன்னும் புதிய ஆசிரியர் வரவில்லை' எனப் பெருமூச்சு விட்டாள். உள்ளே சென்று அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில், தலைமையாசிரியர் புதிய ஆசிரியருடன் வகுப்புக்குள் நுழைந்தார். அபிக்கு ஆச்சரியமாகிவிட்டது. அந்த புதிய ஆசிரியர் வேறு யாருமில்லை; அபி பள்ளி வரை அழைத்து வந்தவர் தான்!

''இவர்தான் உங்கள் புதிய வகுப்பாசிரியர் மற்றும் தமிழ் ஆசிரியர். இவர் பெயர் முத்தமிழ்ச் செல்வன்'' என்று அறிமுகப்படுத்தினார் தலைமையாசிரியர். ''பார்வையற்ற இவரை நம் பள்ளிவரை யாரோ ஒரு மாணவி கவனமாக அழைத்து வந்ததாகக் கூறினார். அவள் இந்த வகுப்பைச் சேர்ந்தவள்தான் எனக் கூறினார். ஆனால் அவள் யாரெனக் கூறவில்லை. அவள் பெயரைத் தங்கள் அனைவரின் முன் கூறிப் பாராட்ட வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்'' என்ற தலைமையாசிரியர். ''சொல்லுங்கள் முத்தமிழ்ச் செல்வன். அந்த மாணவியின் பெயர் என்ன?'' என்றார்.

''அவள் பெயர் அபி!'' என்றார் முத்தமிழ்ச் செல்வன். அடுத்த நொடி வகுப்பு முழுவதும் கர ஒலி காதைப் பிளந்தது.

''படிப்பு முக்கியம்; அதைப்போன்றே பண்பாடும் முக்கியம். அதையும் அபி படித்திருக்கிறாள். அதுதான் எங்களுக்குப் பெருமை?'' தலைமையாசிரியர் சொல்ல வகுப்பில் மீண்டும் கரவொலி எழுந்தது. ●



கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...

உள்ளே...


சிலந்தி

இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற மன்னர்கள் வரிசையில், தமிழகத்தின் ராஜராஜசோழன், வடக்கே சந்திர குப்த மௌரியர், அசோகர்... என்று பலரைச் சொல்லலாம். அயல்நாட்டு வரலாற்றில் இடம் பெற்ற மன்னர்களில் ராபர்ட் புருஸும் ஒருவர்.

1306 முதல் 1329 வரை ஸ்காட்லாந்தின் மன்னராகத் திகழ்ந்தவர் ராபர்ட் புருஸ். ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த ஸ்காட்லாந்தை சுதந்திர நாடாக்கியவர் இவர்தான். தொடர்ந்து ஆறுமுறை போர் தொடுத்து, அந்தப் போர்களில் பெரும் சேதமும் தோல்வியும் ஏற்பட்ட சமயம் அது.

ராபர்ட் புருஸ் அடர்ந்த காட்டில் ஒரு குகையில் ஓய்வாகப் படுத்திருந்தார். அவரது உள்ளத்திலே களைப்பு; உடலில் அதற்கும் அதிகமான களைப்பு! 'இங்கிலாந்தை வெற்றி கொள்ளவே முடியாதா? ஒவ்வொரு முறையும் திட்டமிட்டு, துணிகரமாகத்தான் போர் தொடுக்கிறோம். ஆனாலும் நினைத்தது நடக்கவில்லையே' என்கிற கவலை அவரைச் சோர்வடைய வைத்தது. ஆனாலும், 'அடுத்து என்ன செய்வது?' என்கிற கேள்வி, அவருக்குள் புரண்டு கொண்டே இருந்தது. அதனால், மன அமைதியற்று இருந்தார் புருஸ்.

தற்செயலாக அவரது கவனம் குகையின் மேல் முகப்பிற்குச் சென்றது. அங்கே ஒரு சிலந்தி வலை பின்ன முயன்று கொண்டிருந்தது.







சு. அபிஷேக்.
உ.எண்: 518.
சென்னை.



படிப்பினைக் கதை

டீச்சர்!

அதை அவர் உற்று நோக்கினார். பாவம்; அந்த முயற்சியின்போது மீண்டும் மீண்டும் கீழே விழுந்தது அந்தச் சிலந்தி! ஆனாலும், அது தன் முயற்சியை நிறுத்தவில்லை. அதையே கவனித்துக் கொண்டிருந்தார் புரூஸ். 'முடியவில்லை என்று தெரிந்த பின்பும், ஏனிப்படி கஷ்டப்படுகிறது? சிலந்திதானே. அதற்கு இப்படியெல்லாம் யோசிக்கத் தெரியாது தானே... அதனால்தான் கஷ்டப்படுகிறது' என்று நினைத்தார்.

சிலந்தியே, என்னைப்போல் நீயும் தோற்றுத்தான் போகப் போகிறாய். வீணாக ஏன் சக்தியை விரயம் செய்கிறாய்? முயலாதே என்று தன்னுள் சொல்லிக் கொண்டார். சிலந்தியைப் பார்த்துக் கேலியாக சிரிக்கவும் செய்தார்.

ஆனால் தன்னுடைய முயற்சியை நிறுத்தாத சிலந்தி இறுதியில் தன் வலையை அமைத்து ஜம்மென்று உட்கார்ந்துவிட்டது. அதைப் பார்த்த புரூஸின் மனம் அவரையே கேலி செய்தது. 'முடியாது என்று மனம் தளர்ந்தாயே... அந்தச் சிலந்தி ஜெயித்துவிட்டது பார்த்தாயா? என்றது மனம். 'ஒரு சிலந்திக்கு இருக்கும் மன உறுதி எனக்கில்லையா?' என்ற வேகம் பொங்கியது அவருக்குள்.

ராபர்ட் புரூஸ் பொங்கி எழுந்தார். ஏழாம் முறையாகப் படை திரட்டினார். ஆங்கிலேயரை ஜெயித்து ஸ்காட்லாந்தை சுதந்திர நாடாக்கினார். தோல்விகளைக் கண்டு தளராத மன உறுதியை, ஊக்கத்தை அளித்தது அந்தச் சிலந்தி டீச்சர்தான். ●



* ராபர்ட் புரூஸ்


உங்கள்




த.பிரகல்யா,
உ. எண் 318, பத்தாம் வகுப்பு, பொன்னையா இராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்



த.மௌரியா,
உ. எண் 939,
கோவை



ர.செல்வசுவேதா,
எட்டாம் வகுப்பு, உ. எண் 1182, ஸ்ரீ சாரதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்



என்.தமிழ்செல்வி,
உ. எண் 1059, பத்தாம் வகுப்பு, நாகப்பா மாதப்பா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர்

கைவண்ணம்!

திறமை






எம்.ஜெயமுருகன்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ ரமண வித்யாலயா,
ராஜபாளையம்

கே.எஸ்.யோகேஸ்வரன்,
உ. எண் 146,
திருச்சி



எஸ்.பாலச்சந்தர்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
காளப்பட்டி



கா.ஸ்வாதித்யா,
உ. எண் 1151,
திருப்பத்தூர்



* பாரடைஸ் மீன்



மணிக்கு 6 கி.மீ. வேகம் வரை வீசுவது - மென் காற்று

மணிக்கு 6 கி.மீ. முதல் 11 கி.மீ. வரை வீசுவது - இளந்தென்றல்

மணிக்கு 12 கி.மீ. முதல் 19 கி.மீ. வரை வீசுவது - தென்றல்

மணிக்கு 20 கி.மீ. முதல் 29 கி.மீ. வரை வீசுவது - புழுதிக் காற்று

மணிக்கு 30 கி.மீ. முதல் 39 கி.மீ. வரை வீசுவது - ஆடிக்காற்று

மணிக்கு 40 கி.மீ. முதல் 100 கி.மீ. வரை வீசுவது - கடுங்காற்று

மணிக்கு 101 கி.மீ. முதல் 120 கி.மீ. வரை வீசுவது - புயல் காற்று

மணிக்கு 120க்கும் மேல் வீசுவது - சூறைக்காற்று

- ஆர்.தீபக்குமார், ஆறாம் வகுப்பு, கமலா சுப்ரமணியம் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

இன்று உலகம் முழுவதும் பரவலாக பயன்படுத்தப்படும் லிஃப்ட், முதன் முதலாக பிரான்ஸ் மன்னர் 15ஆம் லூயி வசதிக்காக 1774ல் உருவாக்கப்பட்டது.

- ஆர்.ஜனனி, உ. எண் 181, ஏழாம் வகுப்பு, ஏ.ஜி.எம். மேல்நிலைப் பள்ளி, எரகுடி

* அத்தி, பலா மரங்கள் பூப்பது இல்லை!
* அன்னாசிப் பழத்துக்கு விதைகள் இல்லை.

4



* அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை
* அரேபியாவில் ஆறுகள் இல்லை.
* இந்தியாவில் எரிமலைகள் இல்லை.
* யமுனை ஆறு கடலில் கலப்பது இல்லை.
* ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை.
* காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்தது இல்லை.

- கி.சிந்து, உ. எண் 786, ஒன்பதாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

* கரையான்களுக்கு கண் இல்லை.
* ஆமைகளுக்கு பல் இல்லை.

கதம்பம்

✱ பாம்புகளுக்கு காது இல்லை.

✱ நத்தைக்குக் கால்கள் இல்லை. உடம்பின் அடிப்பாகம் முழுவதுமே தட்டையான கால் மாதிரி செயல்படுகிறது.

✱ பூனையின் கண்கள் இருளில் மின்னுவதற்குக் காரணம், 'டபிடம் லூஸிடம்' என்ற அடுக்கு.

✱ அனைத்து நாய்க்குட்டிகளும் பிறந்தவுடன் குருடு மற்றும் செவிடுதான். 10 நாட்களுக்குப் பிறகே அவற்றால் காண முடியும்; 13 நாட்களுக்குப் பிறகே கேட்க முடியும்.

ஸ்தூபிகள்!

✱ சில வகை மீன்கள் கூடுகட்டி, அதில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். (உதாரணம்: பாரடைஸ் மீன்)

- ஜி.ப்ரணவ், உ. எண் 424,
திருச்சி

✱ 'கைவிளக்கு ஏந்திய காரிகை' என்று அழைக்கப்படுபவர் ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்.


✱ 'பஞ்சாப் சிங்கம்' என்று குறிப்பிடப் படுபவர் லாலா லஜபதி ராய்.

✱ 'முத்துத் தீவு' என்று அழைக்கப்படுவது பஹ்ரைன்.

✱ 'மலைகளின் ராணி' என்று தமிழ்நாட்டில் குறிப்பிடப்படுவது ஊட்டி.

✱ சார்மினார் என்றால், 'நான்கு ஸ்தூபிகள்' என்று பொருள் படும்.

- பெ.சண்முகம், உ. எண் 1169,
பத்தாம் வகுப்பு, சங்கர் மேல்நிலைப் பள்ளி,




✱ பூமியின் சுற்றளவை முதன் முதலில் அளந்தவர் 'எரடாஸ்தனிஸ்' என்பவர்.

✱ சைபீரியாவில் உள்ள 'வெர்கோயான்ஸ்' என்ற இடம் உலகின் மிக குளிர்ச்சியான இடமாகக் கருதப்படுகிறது.

- கி.சிந்து, உ. எண் 786,
மயிலாடுதுறை



✱ எரடாஸ்தனிஸ்



✱ 15ஆம் லூயி



✱ லாலா லஜபதி ராய்



✱ ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கே

தமிழகத்தின் பல ஊர்கள் பெரும்பாலும் ஆலயங்களாலேயே புகழ் பெற்றவைதான்! காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள எங்கள் ஊரான, திருக்கழுக்குன்றமும் அவற்றுள் ஒன்று.

ஊரின் பெயரே தெரியாமல், கழுகு உச்சிக் காலத்தில் உணவருந்த வரும் தலம் என்று பலரும் எங்கள் ஊரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்கள். இறைவனுக்கு நிவேதனம் முடிந்ததும், பூசாரி அந்த உணவை மலை உச்சியில் வைத்து, கரண்டியால் தட்டியவுடன் கழுகுகள் வந்து, இந்த உணவைச் சாப்பிடும். எப்போதும் இரண்டு கழுகுகள் மட்டுமே வரும். ஒற்றைக் கழுகோ, இரண்டுக்கு மேற்பட்ட கழுகுகளோ வராது என்பதுதான் ஆச்சர்யம்! இவை வரலாற்று ரீதியாகப் பதிவு செய்யப்பட்ட விஷயங்கள்.

நாரதரின் சாபம் பெற்ற சம்புபுத்தன், மாபுத்தன் ஆகிய இருவரும் கழுகாக வந்து வழிபடுவதாகப் புராணம்! சமீப காலமாக, அந்தக் கழுகுகள் வருவதில்லை. என்றாலும், திருக்கழுக்குன்றம் என்றவுடன் நினைவுக்கு வரும் விஷயம் இதுதான்.

அதுபோல, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு தோன்றக்கூடிய, அபூர்வமான சங்கு தீர்த்தம் எங்கள் ஊரின் தனிச்சிறப்பு!

நான்கு வேதங்களும் மலையாக, அந்த மலை மீது கோயில் கொண்டுள்ளார் சிவபிரான். அதனால், அவருக்கு வேதகிரீஸ்வரர் என்று பெயர். திரிபுரசுந்தரி என்பது இங்குள்ள அம்பிகையின் பெயர். கதலி வாழையை தலவிருட்சமாகக் கொண்ட ஆலயம் இது.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பட்ட கோயில் இது. திருவண்ணாமலை போல, இங்கும்



கழுகுக்கு

எப்போதும் இரண்டு கழுகுகள் மட்டுமே வரும். ஒற்றைக் கழுகோ. இரண்டுக்கு மேற்பட்ட கழுகுகளோ வராது



ஞானசேகரன்.
உ.எண்: 1145.
திருக்கழுக்குன்றம்.

எங்கள் ஊர்

பௌர்ணமி தோறும் பெருந் திரளான பக்தர்கள் கிரிவலம் செய்கிறார்கள்.

ஒரு முறை காஞ்சி மகாபெரியவர் பேசும்போது, ''மலையைச் சுற்றி வரும்போது 'தேவ தேவ மஹாதேவ' என்று சொல்கிறீர்கள். சரிதான்; ஆனால், வேத மலைமீது கோயில் கொண்டுள்ளான் ஈஸ்வரன். அதனால், 'வேத வேத மஹாவேத' என்று சொல்வது இன்னமும் பொருத்தமாக இருக்கும்'' என்றாராம்.

ஏரி மாவட்டம் என்று புகழ்பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தில்தான், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயமும் இருக்கிறது. மூலிகைக் காற்றால் உடல் ஆரோக்கியத்தையும், தொழுது நிற்பதால் மனோபலத்தையும் தருகின்ற திருக்கழுக்குன்றமும் இருக்கிறது. படியேறச் சென்று தரிசித்தால், உடல் மட்டுமல்ல; மனமும் நலம்பெறும். ●



* வேடந்தாங்கல் சரணாலயம்



* வேடந்தாங்கலுக்கு ...




* ... வரும் பறவைகள்!

லஞ்ச்!



* வேடந்தாங்கல் சரணாலயம்

I. விடுபட்ட எண்ணைக் கண்டுபிடி.



II. விடுபட்ட எண் என்ன? கண்டுபிடிக்கவும்.

7, 8, 10, ☐, 17, 22, 28

- எஸ்.ஸ்ரீநிவாஸ், உ. எண் 135, சேலம்


III. 1) EXAMINATION என்பதை FYBNJOBUJPO என்று எழுதினால் DOCTOR என்பதை எழுதும் முறை கீழ்க் கண்டவற்றுள் எது?

1) EDPUPS 2) DEPUSP
3) EPDUPS 4) EDUPSP

2) TABLE என்பதை 81265 என்றும், CANDLE என்பதை 317465 என்றும் குறிப்பிட்டால் CABLE என்பதை குறிப்பது எது?

1) 31265 2) 32615
3) 65231 4) 56321





3) MATRICULATION என்பதை MATCN என்று எழுதினால் CALCULATION என்பதை எழுதும் முறை?

1. CALCULN 2. CALCN

எவ்வளவு

3. CALCTION 4. CALN

- பி.ஆதித்யன், ஒன்பதாம் வகுப்பு, வித்யாலய உயர்நிலைப் பள்ளி, கோவை

IV. சரியா?

அ) 153 = $1^3 + 5^3 + 3^3$
ஆ) 370 = $3^3 + 7^3 + 0^3$

- என். கார்த்திக், ஒன்பதாம் வகுப்பு, வித்யாலய உயர்நிலைப் பள்ளி, கோவை

V. 1) ஒரு பெட்டியில் ஐந்து அறைகள் உள்ளன. அவற்றில் மொத்தம் 100 மிட்டாய்கள் உள்ளன. முதல் மற்றும் இரண்டாம் அறையிலுள்ள மிட்டாய்களின் மொத்த எண்ணிக்கை 52. இரண்டாம்

அறை மற்றும் மூன்றாம் அறைகளிலுள்ள மிட்டாய்களின் மொத்த எண்ணிக்கை 643. மூன்றாம் அறை மற்றும் நான்காம் அறைகளிலுள்ள மிட்டாய்களின் மொத்த எண்ணிக்கை 34. நான்காம் அறை மற்றும் ஐந்தாம் அறைகளிலுள்ள மிட்டாய்களின் மொத்த எண்ணிக்கை 30. ஒவ்வொரு அறையிலும் உள்ள மிட்டாய்களின் எண்ணிக்கை எவ்வளவு?

2) என் வயதும் என் தம்பியின் வயதும் 3 : 2 விகிதம். என் தம்பியின் வயதும் என் தங்கையின் வயதும் 3 : 2 விகிதம். எங்கள் மூவரின் வயதையும் கூட்டினால் 19 வரும். அப்படியானால் தனித் தனியாக எங்கள் வயது என்ன?

பசுக்கள்?

3) வறட்சி நிவாரண நன்கொடைக்காக சில முக்கியப் பிரமுகர்களிடம் உண்டியில் நிதி ஒதுக்கப்பட்டது. முதல் நபர் ஒரு தொகையை உண்டியலில் போட்டார். இரண்டாம் நபர் முதல் நபரை விட இரு மடங்கு தொகையை உண்டியலில் போட்டார். மூன்றாமவர் இரண்டாம் நபரைவிட மூன்று மடங்குத் தொகையை உண்டியலில் போட்டார். நான்காம் நபர் மூன்றாவது நபரைவிட நான்கு மடங்கு தொகையை உண்டியலில் போட்டார். நால்வரும் போட்ட மொத்த தொகை 16,500. அப்படியானால் ஒவ்வொருவரும் போட்ட தொகை எவ்வளவு?

- ஆர்.ஆசிக் அகமது, உ. எண் 1157, கம்பம்

புதிர்கள்

VI. உதயா ஒரு பசுக்கூட்டத்தை ஆதனூர் சந்தைக்கு ஓட்டிச் சென்றான். வழியில் 3 வயல்கள் இருந்தன. பசுக்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து அந்த வயல்களில் மேய்ந்தன. அப்போது ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் தொகை ஒற்றைப் படையில் இருந்தது.

வயல்களுக்கு அருகில் 7 குளங்கள் இருந்தன. வயல்களில் வயிறார மேய்ந்த பசுக்கள் ஏழு பிரிவுகளாகப் பிரிந்து ஏழு



குளங்களில் நீர் குடித்தன. அப்போதும் ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப் படையில் இருந்தது.

குளங்களுக்கு அருகே ஒன்பது அரச மரங்கள் இருந்தன. நீர் குடித்த பசுக்கள், ஒன்பது பிரிவுகளாகப் பிரிந்து ஒன்பது மரங்களின் நிழலில் இளைப்பாறின. அப்போதும் ஒவ்வொரு பிரிவிலும் இருந்த பசுக்களின் எண்ணிக்கை ஒற்றைப் படையிலேயே இருந்தது. அப்படியானால் உதயாவிடம் இருந்த பசுக்கள் எத்தனை?

- த.தாரணி, உறுப்பினர் எண் 785, அம்மாபேட்டை


விடைகள் 56ம் பக்கம்




வண்ணம் தீட்டுங்கள்!

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

மூளைக்கு வேலை



இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.விடைகள் 56ம் பக்கம்.



"அம்மா இங்கே பாருங்கள்" மகிழ்ச்சியோடு விடைத்தாளை அம்மாவிடம் காட்டினான் சுரேஷ்.

அதைப் பார்த்த அம்மாவுக்கு மகிழ்ச்சி. முதல் ஐந்து கணக்குகள் மட்டுமே தவறு; மற்றவை அனைத்தும் சரி!

சென்ற தேர்வில்கூட கணிதப் பாடத்தில் தோல்வி அடைந்திருந்தான். அதற்காக அவனைக் கண்டித்தாள் அம்மா. அதன் விளைவு, இம்முறை நன்றாகச் செய்திருக்கிறான் என்று திருப்தியடைந்தாள்.

சுரேஷ் நன்கு ஓவியம் வரைவான். ஆனால் படிப்பில் சுமார்தான். சுரேஷின் அக்கா ராஜேஸ்வரி படிப்பில் படுசுட்டி. அவளும் சுரேஷ் படிக்கும் பள்ளியில்தான் படிக்கிறாள்.

அன்று மாலை பள்ளி முடிந்து வந்த ராஜேஸ்வரி, அம்மாவிடம் சொன்னாள்: ''அம்மா, கணக்குத் தேர்வில் சுரேஷ் தனக்கு முன் அமர்ந்து எழுதிய மாணவனைப் பார்த்துக் காப்பியடித்திருக்கிறான். இதைக் கண்டுபிடித்த ஆசிரியர் சுரேஷைக் கண்டித்திருக்கிறார். இதை அவன் வகுப்புத் தோழி என்னிடம் சொன்னாள்.''

ராஜேஸ்வரி கூறியதைக் கேட்ட அம்மாவுக்கு மனம் கனத்தது.

முதல்



க. பாரதி.
ஐந்தாம் வகுப்பு.
ஊ.ஒ.தொ.பள்ளி.
காயக்காடு.

''படிப்பில் பின்தங்கியிருப்பது என்பது ஒரு சிலருக்கு இயல்பு. ஆனால் உரிய முயற்சியின் மூலம் முன்னேற்றம் பெற முடியும். இந்த காப்பியடிக்கும் பழக்கம் சொந்த முயற்சியையே முறியடித்து விடுமே. பக்குவமாய்த்தான் அவனை வழிக்குக் கொண்டுவர வேண்டும்' என்று மனத்தில் நினைத்துக் கொண்டாள்.

அறிவுரைக் கதை

பரிசு!

''அம்மா இந்தச் சிறுவர் இதழைப் பாருங்கள். ஓவியப் போட்டி அறிவித்திருக் கிறார்கள். நான் கலந்து கொள்ளட்டுமா?'' என்று ஆர்வமாய்க் கேட்டான் சுரேஷ்.

''கலந்துகொள் சுரேஷ்'' என்றாள் அம்மா.

சுரேஷ் கடுமையாக முயற்சி செய்து கொடுக்கப்பட்டிருந்த தலைப்புக்கு அழகாக ஓவியம் வரைந்து முடித்தான். அதை அம்மாவிடம் கொடுத்து பத்திரிகைக்கு அனுப்பச் சொல்லிவிட்டு, பள்ளிக்குச் சென்றுவிட்டான்.

சில நாட்கள் கடந்தன.

அன்று பத்திரிகை அலுவலகத்தி லிருந்து வந்த கடிதத்தைப் படித்தவனுக்கு ஒரே அதிர்ச்சி! ஆம். கடிதம் அவனுடைய அக்கா ராஜேஸ்வரிக்கு எழுதப்பட்டிருந்தது.

'தாங்கள் ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கறீர்கள் என்பதை மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறோம். அடுத்த இதழில், தங்களின் ஓவியம் பிரசுரமாகும். தங்களின் புகைப்படம் ஒன்றை அனுப்பி வைக்கவும்' என்று எழுதியிருந்தது.

அதிர்ந்து போனான். அம்மா வைப் பார்த்து, ''நான் வரைந்த ஓவியத்தை அக்காவின் பெயரில் அனுப்பியுள்ளீர்களே, என்னுடைய உழைப்பிலா அவளை உயர்த்த நினைப்பது? இது நியாயமா?'' என்று கோபமாய்க் கேட்டான் சுரேஷ்.

''உன் கேள்வி சரிதான் சுரேஷ். உன் ஓவியத்தை அக்கா பெயரில் அனுப்பியது தவறு என்றால், அடுத்தவன் படித்து தேர்வில் எழுதியதை, அப்படியே காப்பி யடித்து மதிப்பெண் பெற்று, அதை நீ வாங்கிய மதிப்பெண் என்று கொண்டு வந்து காட்டினாயே. அது மட்டும் தவறில் லையா?'' என்றாள் அம்மா.

கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது சுரேஷுக்கு. பதில் சொல்ல முடியாமல் அங்கிருந்து சென்றான்.


அடுத்த சில நாட்கள் அவன் யாரிட மும் பேசவில்லை. இந்த மௌனம் அவனைச் சிந்திக்க வைக்கும் என, அம்மா உறுதியாய் நம்பினாள்.

மேலும் சில தினங்கள் கடந்தன.

மாலை பள்ளியிலிருந்து வந்த சுரேஷுக்கு ஆச்சரியம். ஆம்; அவனது புகைப்படத்துடன் அவன் வரைந்த ஓவியம் சிறுவர் இதழில் வெளியாகி இருந்தது. அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

''அம்மா, இனிமேல் காப்பியடிக்கமாட் டேன். என்னுடைய உழைப்பில் முன்னேற முயற்சி செய்வேன். அதுதான் உண்மை யான மகிழ்ச்சியையும், பெருமையையும் தரும் என்பதை நன்றாகவே உணர்ந்து விட்டேன்'' உறுதியாகச் சொன்னான் சுரேஷ். அதைக் கேட்ட அம்மாவின் முகம் மேலும் மலர்ந்தது. ●

ஆமைக்குத்



பறவைகள், விலங்குகள், மீனினங்கள், மனிதன்... என்று உயிர்களெல்லாம் பல்வேறு காரணங்களுக்காக வேகமாகச் செயல்படுகின்றன. உயிர் பிழைக்கத் தாவியோடுகிறது முயல்; தன் இரையைப் பிடிக்கப் பாய்ந்தோடுகிறது சிறுத்தை!

தற்காப்புக்காகவும், உணவுக்காகவும் நிகழ்கின்ற இந்த இயக்கத்தில், அவற்றின் வேகம் ஆச்சரியமளிப்பதாக இருக்கிறது. பறவைகளில் 'ஸ்வைன் டெய்ல்ட் ஸ்விஃப்ட்' (Swine tailed swift) என்னும் பறவை அதிக பட்சமாக 350 கி.மீ. வேகத்தில் பறக்கிறது. நிலத்தில் வாழும் விலங்குகளில் சிறுத்தை அதிகபட்சமாக 128 கி.மீ. வேகத்தில் ஓடுகிறது; நீர் வாழ் உயிர்களில் பாய்மர மீன் மணிக்கு 110 கி.மீ. வேகத்தில் நீந்துகிறது.



டி.ஜான்பால்,
உ.எண்: 1233,
ஓசூர்.

தம்பி!

மிக மெதுவாகச் செல்பவர்களை ஆமை வேகம் என்று கிண்டல் செய்வார்கள். ஆனால், அமெரிக்காவில் காணப்படும் ஸ்லாத், ஆமையைவிட மெதுவாகச் செல்கிறது. அதாவது, மணிக்கு அதனுடைய வேகம் 0.093 கிலோ மீட்டர். அதேசமயம், ஆமை மணிக்கு 0.5 கி.மீ. வேகத்தில் செல்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இதோ

சில உயிரினங்களின் வேகம் மணிக்கு :

பொன் கழுகு - 192 கி.மீ.
புறா - 97 கி.மீ.
சிங்கம் - 80 கி.மீ.
முயல் - 72 கி.மீ.
பந்தயக் குதிரை - 64 கி.மீ.
ஒட்டகச் சிவிங்கி - 56 கி.மீ.
'கிரிஸ்லி' கரடி - 51 கி.மீ.
பூனை - 48 கி.மீ.
யானை - 45 கி.மீ.
தேனீ - 37 கி.மீ.
பன்றி - 18 கி.மீ.
நத்தை - 0.05 கி.மீ.





பாவச்செயல்!

அன்று காலை வரலாறு வகுப்பு!

எங்கள் ஆசிரியர், அசோகரின் மனமாற்றம் எப்படி ஏற்பட்டது? அதற்குக் காரணமான கலிங்கப் போரில் ஏற்பட்ட பேரழிவு, மக்களின் துன்பம்... என்று விரிவாகச் சொல்லி, இன்றைய சூழலைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

''அசோகருக்கு ஏற்பட்டது போல, நம் அனைவருக்கும் மனமாற்றம் ஏற்படவேண்டும். மக்கள் அனைவரும் சமம்; அனைவரும் ஒரே இனம் என் கிற எண்ணம் எல்லோ

எங்கள் தமிழாசிரியர் மாணவர்களைக் கவரும் வண்ணம் பாடம் நடத்துவார். ஒருநாள் அவர் தமிழின் சிறப்பு பற்றி சொல்லிக் கொண்டிருந்தார்.

''தமிழின் எழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகையாகப் பிரித்துச் சொல்கிறோம். க,ச,ட,த,ப,ற என்னும் ஆறு எழுத்துக்களும் அழுத்தமாக உச்சரிக்கப்படுபவை. அத னால், வல்லின எழுத்துக்கள் எனப்படும். அடுத்து ங,ஞ,ண,ந,ம,ன என்னும் ஆறு எழுத்துக்களும், அழுத்தம் தரப்படாமல் உச்சரிக்கப்படும். அதனால், அவை மெல் லினம். மீதமுள்ள ய,ர,ல,வ,ழ,ள என்னும் ஆறு எழுத்துக்களும் மிதமான அழுத்தம் பெறுவதால் இடையினம் எனப்படுபவை. இந்த மூன்று பிரிவுகளிலிருந்தும் தலா ஒரு எழுத்து சேர்ந்ததுதான் தமிழ்! தமிழ் என்பதில் உள்ள 'த' வல்லினம், 'மி' மெல் லினம்; 'ழ்' இடையினம். இது தமிழுக்குரிய தனிச் சிறப்புகளில் ஒன்று.'' சொல்லி முடித்த ஆசிரியர் அடுத்துக் கேட்டார்:

''தமிழில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன. சொல்லுங்க பார்க்கலாம்.''

ஸ்கூல் கலாட்டா

ருக்கும் ஏற்பட வேண்டும். தீண்டாமை என்கிற கொடுமை, நம்முடைய தேசத்தில் அறவே இல்லாமல் போக வேண்டும். அதற்கு, கல்வி மிக மிக அவசியம்!

'தீண்டாமை ஒரு பாவச் செயல்; தீண்டாமை ஒரு பெருங்குற்றம்; தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்!'

என்று ஆசிரியர் சொல்லி முடிக்கவும். பெல் அடிக்கவும் சரியாக இருந்தது.

ஆசிரியர் வெளியே போவதைக்கூட கவனிக்காமல், பக்கத்திலிருந்த நண்பன் என்னவோ எழுதிக் கொண்டிருந்தான். எடுத்துப் பார்த்தேன். சிரிப்பை அடக்க முடியவில்லை. அவன் என்ன எழுதியிருந்தான் தெரியுமா?

காலாண்டுத் தேர்வு ஒரு பாவச் செயல்
அரையாண்டுத் தேர்வு ஒரு பெருங் குற்றம்
முழு ஆண்டுத் தேர்வு மனிதத் தன்மையற்ற செயல்!

அதை உரக்கப் படிக்க, வகுப்பறையே கலகலத்தது.

- எஸ்.தணிகைவேல்,
உ எண் 762,
காஞ்சிபுரம்

கேட்ட வேகத்தில் ஒரு மாணவன் வேகமாக எழுந்து சொன்னான்.

"மூன்றெழுத்து!"

அதைக் கேட்டு மாணவர்கள் அனைவரும் சிரித்தனர். ஆசிரியருக்கும் சிரிப்பு வந்தது. என்றாலும் சொன்னார் :

"தமிழ் என்பது மூன்றெழுத்துச் சொல். சொன்னது சரிதான். ஆனால், தமிழில் என்று கேட்டால், தமிழ் மொழியில் என்று பொருள் கொள்ள வேண்டும். அதற்கு 247 எழுத்துகள் என்பதுதான் சரியான பதில்.'


அத்துடன் பதில் சொன்ன மாணவனை நெருங்கி, "அவசரப்படாமல் பதில் சொல்" என்று தட்டியும் கொடுத்தார். அவனுக்கு மூன்றெழுத்து என்பது அடைமொழியாகிவிட்டது.

- ம.குமார்,
எட்டாம் வகுப்பு,
ஊ.ஒ. நடுநிலைப் பள்ளி,
திருவந்தவார்



மூன்றெழுத்து!

விதையில்லாத



I. 1.அடிமேல் அடிவாங்கி ஆட்டத் துக்கு வழிவகுப்பான் - அவன் யார்?

2. விதையின்றி முளைக்கும்; வேரின்றி வளரும் - அது என்ன?

3. உணவை எடுப் பான்; உண்ணவும் மாட்டான் - அவன் யார்?

4. ஐந்து ஊருக்கு ஒரு மைதானம் - அது என்ன?

5. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது - அது என்ன?

6. கருத்த பாறைக்கு வெளுத்த வேர் - அது என்ன?

7. இனிப்பு பொட்டலத்துக்கு ஆயிரம் காவலர்கள் - அது என்ன?

8. போகும் இடமெல்லாம் கோடு கிழிப்பான் - அவன் யார்?

9. பல் இருப்பவன் கடிக்கவில்லை; பல் இல்லாதவன் கடிக்கிறான் - இவர்கள் யார்?

- **மீ.சொர்ணம், உடுமலைப்பேட்டை**


II. 1.கால், கை இல்லை; காடும் மலையும் தாண்டுவான் - அவன் யார்?

2. உச்சியிலே கிரீடம்; உடம்பெல்லாம் கண் - அது என்ன?

3. ஓராண்டு உழுதவனுக்கு ஒரு வார அறுவடை - அது என்ன?

4. கரிச்சட்டி வயிற்றிலே வெள்ளை முத்துக்கள் - அது என்ன?

- **ஜெ.ச.பாரதி, உ. எண் 1297, நான்காம் வகுப்பு, திருவள்ளுவர் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, பல்லடம்**



III. 1. விதையில்லாத செடி, மழையில் பிறந்து வெயிலில் காயும் - அது என்ன?

2. குடியிருக்க கோட்டை கட்டும், கோட்டையை உடைத்து வெளிவரும் - அது என்ன?

3. பச்சை பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள் - அது என்ன?

விடுகதைகள்

4. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் ராணி - அது என்ன?

- உ. ரியாஷ், கீழக்கரை

IV. 1. இருந்த இடத்தில் இருந்தபடி சேதிகள் பரிமாற உதவுவான் - அவன் யார்?



2. தண்ணீர் இல்லாமல் வளரும்; தரையில்லாமல் படரும் - அது என்ன?

3. காயும் காய்க்கும்; பூவும் பூக்கும். கையை நீட்டினால் குத்திக் கிழிக்கும் - அது என்ன?

- ஜெ.ச.பிரபாகரன், உ. எண் : 1193, ஆறாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, பல்லடம்

V. 1. மீன் பார்த்து தின்பது எதனால்? மிதியடியில் நிற்பது எதனால்?

2. காற்றாடி பறப்பது எதனால்? அறிவு வளர்வது எதனால்?

3. அறிவின் மறுபெயர்; இரவில் வருவது. எது?

- த.பிரகல்யா, உ. எண் 318, பத்தாம் வகுப்பு, பொன்னையா இராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்

VI. 1. குடுக்கை நிறைய வைர மணி - அது என்ன?

2. நல்லதை அனுப்பி விட்டுக் கெட்டதை வைத்துக் கொள்வான் - அவன் யார்?

3. மண்டையில் போட்டால் மலர்ந்து சிரிப்பான் - அவன் யார்?

- எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை

VII. 1. முத்துக் கோட்டைக்குள்ளே மூன்று பேர் புகுந்தார்கள். போனவர் வரவில்லை. போர் நடக்குது; ரத்தம் வருது - அது என்ன?

2. முத்துநகை பூட்டி வரும். குதிரை வால் கொண்டைக்காரி, சந்தைக்கு வந்துவிட்டால் சத்துக்குக் குறைவில்லை - அவள் யார்?

- ர.கவினி, உ. எண் 522, மங்கலம்

விடைகள்:



I. 1.மேளம், 2.கொம்பு, 3.கரண்டி, 4.உள்ளங்கை விரல்கள், 5.தேங்காய், 6.யானை தந்தம், 7.தேன்கூடு, 8.நத்தை, 9.சீப்பு, செருப்பு **II.** 1.மேகம், 2.அன்னாசி பழம், 3.தேர்வு, 4.சாதம் **III.** 1.காளான், 2.பட்டுப் பூச்சி, 3.வெண்டைக்காய், 4.முட்டை **IV.** 1. தபால் பெட்டி, 2.தலைமுடி, 3.கள்ளிச்செடி **V.** 1. முள் இருப்பதால், 2.நூலினால், 3.மதி **VI.** 1.மாதுளம்பழம், 2.சல்லடை, 3.தேங்காய் **VII.** 1.வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, 2.மக்காச்சோளம்

மூங்கில் என்றவுடன் பெரும்பாலும் நமக்கு நினைவுக்கு வருபவை, பிரம்புகள்தான்! ஆனால், அதைத் தவிர பலவிதமான பொருட்கள் மூங்கிலைப் பயன்படுத்தி செய்யப்படுகின்றன. பூஜைப் பொருட்களை வைத்துக் கொண்டு செல்லும் கூடைகள், தட்டுகள், ஊஞ்சல், நாற்காலி... இப்படி மூங்கிலால் செய்யப்படும் பல பொருட்களை நாம் நடைமுறை வாழ்வில் பயன்படுத்துகிறோம். மேலும், விழாக்களின்போது பந்தல்கள் அமைப்பதற்கு, கட்டடம் கட்டும் சமயத்தில் அமைக்கும் சாரங்களுக்கு... என்று மூங்கில்களைப் பயன்படுத்துவார்கள்.

முதன்முதலாக ஏவுகணை அமைப்பை போரில் பயன்படுத்திய திப்புசுல்தானும், ஹைதர்அலியும், அதில் வழிகாட்ட மூங்கில் கழிகளை இணைத்து வீசச்





உண்ணலாம்;



மூங்கில்

செய்தனர்.

வேட்டையாடுவதற்குப் பயன்படுத்திய வில்லை, அக்காலத்தில் இளம் மூங்கில்களைக் கொண்டே தயாரித்தனர்.

ஆனால், இவை அனைத்தையும் விட நமக்கு பெரும்பயனை அளிக்கிறது மூங்கில். எப்படித் தெரியுமா? காற்றிலுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு வாயுவை ஈர்த்துக் கொண்டு, ஆக்ஸிஜனை வெளியேற்றுகிறது மூங்கில். குறிப்பாகச் சொன்னால், ஓர் ஆண்டில் பன்னிரண்டு டன் கார்பன் டை ஆக்ஸைடை, ஆக்ஸிஜனாக மாற்றுகின்றன, ஒரு ஹெக்டேர் பரப்பில் வளர்ந்துள்ள மூங்கில்கள்!







உடுத்தலாம்!

தாவர வகைகளில், புல் இனத்தைச் சேர்ந்தது மூங்கில். இது மிகவும் வேகமாக வளரக்கூடியது. இந்த மூங்கிலின் இலைகளில் இருந்து நாம் அணிவதற்கான ஆடைகள்கூட தயாரிக்கப்படுகின்றன. 'இந்த ஆடைகள், மனிதனுக்குத் தீமை கொடுக்கின்ற டாக்டீரியாக்களில் இருந்து பாதுகாப்பளிப்பவை' என்கிறார்கள்.

சுவாசக் கோளாறு தொடர்பான நோய்களுக்கு, மூங்கிலில் இருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. காட்டில் வாழ்கின்ற யானைகள், இளம் மூங்கிலின் குருத்துகளை உணவாக உட்கொள்ளும். காடுகளில் தீப்பிடித்தால், பெரும் வேகத்தில் அவை பரவுவதற்கும், உடனே பற்றிக் கொள்ளுவதற்கும் மூங்கில்களே காரணம் என்பர்.

ஜப்பான், வியட்நாம், கொரியா போன்ற நாடுகளில், மூங்கில் குருத்துகளை உணவாகவும் பயன்படுத்துகின்றனர்.

'மூங்கில் இலை மேலே தூங்கும் பனிநீரே' என்ற முதலடியை ஏற்றப் பாட்டில் கேட்ட கம்பர், மறு அடியைக் கேட்க விடிய விடியக் காத்திருந்து, 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே!' என்று அடுத்த அடியை அறிந்தார் என்றும் சொல்வதுண்டு.

செவி வழியே நுழைந்து, அன்று கோபியரின் உள்ளத்தை மட்டுமல்ல; உயிரினங்கள் அனைத்தையும் தன்வயப் படுத்திய இசை வெள்ளத்தைப் பாய்ச்சியது கிருஷ்ணனின் புல்லாங்குழல். அதுவும் மூங்கிலில் உருவானதுதானே!

W. நடராஜன்.
பத்தாம் வகுப்பு.
புள்ளமங்கலம்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி தோற்றத்திலும் எளிமையைக் கடைப்பிடித்தவர். அவர் அமைச்சராக இருந்த போது ஒருமுறை மதுரைக்கு வந்தார். சிறிது நேரம் ஓய்வெடுப்பதற்காக ரயில் நிலையத்தில் அமைச்சருக்காக ஓர் அறை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

உரிய நேரத்துக்கு முன்னதாகவே ரயில் வந்து விட்டதால், அவரை வரவேற்கப் பிரமுகர்கள் அங்கு வரவில்லை. எனவே அவரே தமக்கு ஒதுக்கப்பட்ட அறையைத் தேடிச் சென்றார். அங்கிருந்த காவலாளி அவரைத் தடுத்து, "இது இரயில்வே அமைச்சருக்காக ஒதுக்கப்பட்ட அறை. உங்களை உள்ளேவிட முடியாது" என்றான். லால் பகதூர் சாஸ்திரியோ பொறுமையாக, "நான்தான் ரயில்வே அமைச்சர்" என்று கூறியும் காவலர் அவரை விடவில்லை.

பிறகு, அதிகாரிகள் வந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டு அவரை உள்ளே அழைத்துச் சென்றனர். அவ்வளவு எளிமையாக விளங்கினார் லால்பகதூர் சாஸ்திரி.

- எஸ்.வினீத் மாதவன்,
உ எண் 1196, மதுரை



எளிமை!

"ஒரு நாள் நான் உலாவச் சென்ற போது ஓடி இளைத்துக் கொண்டிருந்த ஒரு நரியைக் கண்டேன். ஓடச் சக்தி இல்லாதிருந்தும், அது ஓடுவதற்கே முயற்சித்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் சென்றதும் சில வேடர்கள் வந்து, "நரியைக் கண்டீர்களா?" என்று என்னிடம் கேட்டார்கள். "ஆம்" என்று சொன்னேன். "எந்த வழியாகப் போயிற்று?" என்று கேட்டபோது, பொய்யே பகர்ந்தேன். உண்மையைச் சொல்லியிருந்தால் நான் ஒழுக்கமாக நடந்து கொண்டவன் ஆவேன் என்று எனக்குத் தோன்றவில்லை" என்று பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறியுள்ளார். இது பற்றித் தங்கள் கருத்து என்ன?" என்று, ஒரு நிருபர் காந்தியடிகளைக் கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள், "பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னை விடப் பெரிய எழுத்தாளரும், தத்துவ சாஸ்திரியுமாவார். அதற்காக அவருக்கு மரியாதை செலுத்திய போதிலும், நான் அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன். அவர் நரியைப் பார்த்ததாகக் கூறியதே தவறு. முதல் கேள்விக்குப் பதில் கூற வேண்டிய கடமை அவருக்குக் கிடையாது. வேடர்களை வேறு வழியாகத் திருப்பிவிடும் எண்ணம் இருந்தாலொழிய அவர் இரண்டாவது கேள்விக்குக் கூடப் பதில் கூற மறுத்திருக்கலாம். யாருமே எந்தக் காலத்திலும் தம்மிடம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லித் தீர

சம்பவம்

பயன்?

பெரிய செல்வந்தர்கள் பலர், லண்டனில் உள்ள ஓர் ஆடம்பர ஹோட்டலில் வந்து குவிந்திருந்தார்கள். அதைக் கண்ட நண்பர் ஒருவர் பெர்னார்ட் ஷாவிடம், ''இந்தச் செல்வந்தர்களுக்கு இவ்வளவு பணமிருந்தும் என்ன பயன்? அதை எப்படி அனுபவிப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லையே. அவர்கள் எந்த வகையில் சிறந்தவர்கள்?'' என்றார் கேலியாக.




உடனே, ''பணத்தை எப்படி அனுபவிப்பது என்று நமக்குத் தெரிந்திருந்து என்ன பயன்? நம்மிடம்தான் பணம் இல்லையே! அவர்களைக் காட்டிலும் நாம் எந்த விதத்தில் சிறந்தவர்கள்?'' என்றார் ஷா பளிச்சென்று. கிண்டலடித்த நண்பர் அமைதியானார்.

பி.சர்வேஸ்வரன்,
உ எண் 456, மதுரை


வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. உள்ளதை உரைப்பது என்று ஆரம்பித்து விட்டால், அப்புறம் அதற்கு எவ்வித விதி விலக்கும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது'' என்றார் நிதானமாக.

- ஆர்.பிருந்தா,
மதுரை


கருத்து!



திறமை



வே.தனசேகர்,
உ. எண் 31, மூன்றாம் வகுப்பு, காந்தி நகர் மெட்ரிகுலேஷன் பள்ளி, திருவண்ணாமலை



ஜே.சக்தி தர்ஷன்,
முதல் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

சுட்டீஸ் கைவண்ணம்!



ஆர்.பாலாஜி,
உ. எண் 546, நான்காம் வகுப்பு, கலைமகள் மேல்நிலைப் பள்ளி, கும்மிடிப்பூண்டி

எம்.திலிப் குமார்,
ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீ ரமண வித்யாலயா, ராஜபாளையம்








கே.ஜெய்பிரியா,
உ. எண் 378, இரண்டாம் வகுப்பு, இன்ஃபேன்ட் ப்ரி மெட்ரிக் மே.நி. பள்ளி, விருத்தாசலம்

புள்ளிகளை இணையுங்கள்

கண்ணாமூச்சி



கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்.

கொதிக்கும் எண்ணெயில் ஒரு சொட்டு தண்ணீர் பட்டவுடன் வெடிப்பது ஏன்?

சமையலுக்குப் பயன்படுத்தப்படும் தாவர எண்ணெயின் கொதி நிலை அளவு 200 - 250 டிகிரி செ.கி. அளவில் இருக்கும். ஆனால், தண்ணீரின் கொதிநிலை 100 டிகி செ.கி.க்கு மேல். இந்நிலையில் தண்ணீர்த் துளி கொதிக்கும் எண்ணெயில் விழுந்தால், உடனே ஆவியாகி விரிவடைந்து படபடவென்ற வெடிப்பொலி உண்டாகிறது. மாறாக, சூடான கொதிநீரில், எண்ணெய்த் துளி விழுந்தால் நீர்ப்பரப்பின் மேல் எண்ணெய் படலம் படருமே தவிர, எவ்வித ஒலியும் எழாது.





வரிசையாய்ச்

எறும்புகள் ஒரே வரிசையில் செல்வதன் காரணம் :

புழு, பூச்சிகளுக்கிடையே தகவல் தொடர்பு நடைபெறுவதற்குக் காரணமாக இருப்பவை வேதிப்பொருட்கள்.

இரைதேடும் பொருட்டு எறும்பு, புற்றை விட்டு வெளியே செல்லும்போது, தன் தாடைச் சுரப்பியிலிருந்து ஒரு வகை வேதிப் பொருளைக் கசிய வைத்து வெளியேற்றும். இக்கசிவுப் பொருளின் நறுமணம் அதன் பின்னே வரும் எறும்புக்கு வழிகாட்டியாக அமைகிறது. இந்த நறுமணம் உடனடியாக மறைந்துவிடும். அதனால், அடுத்து வரும் எறும்புகளுக்கு வழிகாட்ட, ஒவ்வொரு எறும்பும் வேதிப் பொருளை கசியவிடும். இவ்வாறு ஒவ்வொரு எறும்பும் கசியவிடுகின்ற வேதிப் பொருள்களின் நறுமணம் அதன் பின்னே வரும் எறும்புக்கு வழிகாட்டும் பணியைச் செய்கிறது.

பால் பொங்குவதற்கு என்ன காரணம்?

நாம் பாலை சூடாக்கும்போது, பாலின் மேற்பரப்பில் ஒரு ஏடு உண்டாகிப் படிகிறது. அந்த ஏடு, ஆவி வெளியே செல்ல முடியாமல் தடுக்கிறது. அதனால், அந்த ஏட்டோடு பால் மேலே





இதனால் எல்லா எறும்புகளும் ஒன்றின் பின்னே ஒன்றாக ஒரே வரிசையில் செல்கின்றன.


- எஸ்.தணிகைவேல், உ. எண் 762,

செல்வது ஏன்?

எழும்பிப் பொங்கி வருகிறது.

அப்படிப் பொங்கும்போது, பாலில் தண்ணீர் விட்டால், அந்த ஏடு அப்புறப்படுத்தப்படுகிறது. அதனால் ஆவி வெளியேறி விடுகிறது. பால் பொங்குவதும் அடங்கி விடுகிறது.

- பிரகதீஷ் சுப்ரமணியன், உ. எண் 921, காரைக்கால்



காரணம்

கண்ணாடிக் கோப்பையில் கொதிக்கும் தண்ணீரை விட்டால் ஏன் வெடிப்பு ஏற்படுகிறது?

கண்ணாடி எளிதில் வெப்பத்தை கடத்தாது. எனவே, உட்பகுதி வெப்பமாகவும், வெளிப்பகுதி குளிர்ச்சியாகவும் இருக்கும். வெப்பத்தால் கோப்பையின் உட்பகுதி விரிவடையும். அதேசமயம் வெளிப்பகுதி குளிர்ச்சியாக இருப்பதால் கோப்பை விரிவடையாது. ஒரே சமயத்தில் உட்பகுதி விரிவடைந்தும்,



வெளிப்பகுதி விரிவடையாமலும் இருப்பதால் கோப்பையில் வெடிப்பு ஏற்படுகிறது.

ஆனால், ஒரு உலோக கரண்டியைக் கோப்பையில் போட்டுவிட்டு பிறகு கொதிக்கும் நீரை விட்டால், கண்ணாடியில் வெடிப்பு ஏற்படாது. காரணம், உலோகம் எளிதில் வெப்பத்தைக் கடத்தும் தன்மை கொண்டது. வெப்பம் கரண்டி வழியாக வெளியேறுவதால் கண்ணாடி காப்பாற்றப் படுகிறது.


- உ.ரியாஷ், கீழக்கரை

என்னாலும் முடியும்?!

கதை: பெ. சண்முகம்,
உ.எண்: 1168,
சங்கர் நகர்.
படம்: ராம்கி.






நான் எதுக்காக பயப்படணும்? நீ புலியா, சிங்கமா?
அப்ப போட்டிக்கு வரியா?
என்ன போட்டி?
ம்... ஓட்டப் பந்தயம்!
வேண்டாம். நீ தோத்துப் போயிடுவே!
அது என்னோட கவலை.
அப்படிச் சொல்லு.
ஓடத் தயாராகின.
எது வரைக்கும் ஓடணும்.
எனக்கு நோ ப்ராப்ளம்! நீயே சொல்லு.
அடுத்த கிராமம் வரை போதும். அப்புறம் பாலைவனம்...
அதனால் என்ன? நான் ஓடுவேன்.
ரெடி... ஒன்... டூ... த்ரீ...
ஓட ஆரம்பித்தன.
குதிரை நிதானமாய் வர...
இப்படி ஓடினா ஜெயிக்க முடியாது.
பாலைவனத்தில்...
ஆ... வெயில்! ஒதுங்க இடம் இல்லையே...
குதிரை வேகமாய் முன் செல்ல...
என்னால முடியலை
மெதுவா வா.
களைத்த கழுதை...
ஏய்... நான் விழப் போறேன்.
திரும்பிய குதிரை...
இதுக்குத்தான் சொன்னேன்... கேட்டியா?
தப்புதான்! என்னை காப்பாத்து.
உன்னால முடிஞ்சதை மட்டும் சிறப்பாச் செய்... அதுதான் நல்லது.
நிஜம்தான். எனக்குப் புரிஞ்சுடுச்சு!

விடைகள் பக்கம்

I. முக்கோணத்துக்கு வெளியில் உள்ள மூன்று எண்களும் பெருக்கப்பட்டுக் கிடைக்கும் விடையில் பாதி, முக்கோணத்துக் குள் விடையாக இருக்கும். விடை 48

II. இந்த எண் வரிசையில் இரு எண்களுக்கான வித்தியாசம் 1, 2, 3 என்று கூடிக்கொண்டே போகிறது. விடை : 13.

III. 1) EPDUPS, 2) 31265, 3) CALCN

IV. அ) சரி; 1 + 125 + 27 = 153 ஆ) சரி; 27 + 343 + 0 = 370

சரியான்னு பாருங்க!



V. (1) முதல் அறையில் 27, இரண்டாவது அறையில் 25, மூன்றாவது அறையில் 18, நான்காவது அறையில் 16, ஐந்தாவது அறையில் 14. (2) என் வயது 9, தம்பி வயது 6, தங்கை 4 (3) முதலாமவர் 500. இரண்டாமவர் 1,000. மூன்றாமவர் 2,000. நான்காமவர் 12,000.

VI. பசுக்களின் எண்ணிக்கை 315.

3 : 5 : 7

3 x 5 = 15 x 7 = 105

ஒரு வயலில் மேய்ந்தது 105, 3 வயல்களில் மேய்ந்தது 315, 7 குளத்தில் குடித்தது 315/7 = 45, 9 மரங்களின் நிழலில் படுத்தது = 315/9 = 35.

315, 105, 45, 35

வித்தியாசங்களைக் கண்டுபிடி!	1.மேகம், 2.பறவை, 3.வேலியில் பலகை, 4.காளான், 5.முயலின் வால்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்

(டைஜஸ்ட் பகுதி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

சிறுகதை

மந்திரக் குருவி!

இரா. மனோன்மணி

மகேந்திரபுரியில் மந்திரவாதி ஒருவன் இருந்தான். இவன் சிட்டுக்குருவிகளைப் பிடித்து வைத்திருந்தான்.

தன் மந்திரங்கள் பலிக்கின்றனவா எனப் பரிசோதிக்க, சிங்கம், புலி, யானை போன்ற பெரிய விலங்குகளை அப்படியே விழுங்குவான். வயிற்றுக்குள் செல்லும் விலங்குகள் உள்ளே அங்குமிங்கும் முட்டி தத்தளிப்பதைக் கண்டு வயிறு குலுங்கச் சிரிப்பான். பின் விழுங்கிய விலங்குகளைச் சேதமில்லாமல் உயிருடன் அப்படியே உமிழ்ந்து விடுவான். இது அவனுக்கு ஒரு விளையாட்டு. அவனிடமிருந்து தப்பிய உயிரினங்கள் தறிகெட்டு ஓடுவதை இந்த சிட்டுக் குருவிகள் பார்த்தன. அதில் ஒரு சிட்டுக் குருவி அவனது செயல்களை உன்னிப்பாகக் கவனித்து வந்தது.

விலங்குகளை விழுங்கும்போது சொல்லும் மந்திரம்; விழுங்கிய விலங்குகளை உயிருடன் வெளிக் கொணரும் போது சொல்லும் மந்திரங்கள்; இறந்த விலங்குகளை உயிர்பெறச் செய்வதற்காகச் சொல்லும் மந்திரங்கள்... போன்ற மந்திரங்களைக் கற்றுக்கொண்ட அந்த சிட்டுக்குருவி, ஒருநாள் குகையை விட்டு தந்திரமாக வெளியேறியது!

நாடு முழுவதும் நல்ல மழை பெய்திருந்தது. கிணறுகளும், குளங்குட்டை



களும், கண்மாய்களும் நிரம்பி வழிந்தன. பார்த்த சிட்டுக்குருவிக்கு தனக்குத் தெரிந்த மந்திரங்களைப் பரிசோதிக்க ஆசை வந்தது. உடனே மந்திரம் ஒன்றைச் சொல்லி, அடுத் தடுத்து இருந்த ஏழு கண்மாய்த் தண்ணீ ரையும் குடித்தது. உடனே, சிட்டுக் குருவியின் வயிறு பெருத்தது.

வயிறு பெரிதானதே தவிர, வேறு எந்தக் கஷ்டமும் அதற்கு இல்லை. மந்திரவாதியின் மகிமையை நினைத்து சிட்டுக்குருவி வியந்தது. அப்போது, சைக்கிளை ஓட்டிக் கொண்டு அவ்வழியே ஒருவன் வந்தான். அவன் வியப்பில் வாய்பிளந்து ''சிட்டுக்குருவிக்கு வயித்தைப் பாருடா!'' என்றான்.

''ஏய்! போகிறாயா? உன்னையும் விழுங்குவேன்; உன் சைக்கிளையும் விழுங்குவேன்'' என்றது குருவி.

''எங்கே! விழுங்கு பார்க்கலாம்!'' என்றான் அவன்.

'கடக்' என்று விழுங்கிவிட்டது குருவி!


அடுத்து அவ்வழியே ஓர் இளைஞன், காரை ஓட்டி வந்தான்.


இளைஞனாயிற்றே! சும்மா இருப் பானா? அவனும் ''சிட்டுக் குருவிக்கு வயித்தப் பாருடா!'' என்றான்.

''ஏய்! உன் காரை ஓட்டிக் கொண்டு மரியாதையாகப் போய்விடு. இல்லை யென்றால் உன்னையும் விழுங்குவேன். உன் காரையும் விழுங்குவேன்'' என்றது குருவி. இளைஞன் அஞ்சுவானா? ''எங்கே விழுங்கு பார்க்கலாம்!'' என்றான். குருவி 'கடக்' என்று விழுங்கியது.

அடுத்து ஒரு பேருந்து ஓட்டுநர் குருவியைப் பார்த்தார். ''சிட்டுக்குருவிக்கு வயித்தப் பாருடா'' என்று ஆச்சரியமாகக் கத்தினார். ''ஏய்! மரியாதையாகப் போய் விடு. உன்னையும் விழுங்குவேன். உன் பேருந்தையும் விழுங்குவேன்'' என்றது குருவி. ''எங்கே விழுங்கு பார்க்கலாம்?'' என்றார் நடத்துனர்.

குருவி 'கடக்' என்று பேருந்தை விழுங் கியது.





அடுத்து முடிதிருத்துபவர் ஒருவர் அவ்வழியே நடந்து வந்தான். பலவகை மனிதர்களிடம் பேசிப் பழகிய அவர் மட்டும் சும்மா இருப்பாரா?

"சிட்டுக்குருவிக்கு வயித்தப் பாருடா!" என்றார் அவர்.

"ஏய்! உன் வழியே போகிறாயா? உன்னை விழுங்கட்டுமா?" என்றது குருவி. அவர் அஞ்சவில்லை.

"அற்ப சிட்டுக்குருவியே! அதிகம் பேசாதே! என்னிடம் கத்தி இருக்கிறது" என்றார்.

"மரியாதையாகப் போய்விடு. இல்லாவிட்டால் உன்னையும் விழுங்குவேன். உன் கத்தியையும் விழுங்குவேன்" என்றது குருவி.

"எங்கே! விழுங்கு பார்க்கலாம்" என்றார் அவர்.

குருவி விழுங்க ஆரம்பித்தது.

முடிதிருத்துபவர் கத்தியைக் குருவியின் தொண்டைக்கு நேரே வைத்துக் கொண்டார்.

குருவி விழுங்க விழுங்க, கத்தி குருவியின் பெரிய வயிற்றைக் கீறியது.

குருவி அதிர்ச்சியடைந்தது. வந்தது ஆபத்து என்று புரிந்து கொண்டது! குருவி, தான் இறக்க நேர்ந்தால், உயிர்பெறும் மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தது. குருவியின், கீறப்பட்ட வயிற்றின் வழியாக ஏழு கண்மாய்த் தண்ணீரும், அதனதன் இருப்பிடம் நோக்கிப் பாய்ந்தது.

சைக்கிள் ஓட்டி வந்தவன் சைக்கிளை ஓட்டிச் சென்றான். காருக்குரியவன் தன் காரை ஓட்டிச் சென்றான். பேருந்து ஓட்டுநர் பேருந்தை ஓட்டிச் சென்றார். முடிதிருத்துபவர் தமது கத்தியை எடுத்துக் கொண்டு தன் வழியே சென்றார்.

'மாய மந்திரங்கள் நமக்கெதற்கு? சந்தோஷமாய்ப் பறப்போம்!' என்று சிட்டுக்குருவி வானவெளியில் சிறகடித்தது!



* சிப்மங்க்

● 'ஜாகுவார்' என்ற சொல்லுக்கு, 'ஒரே தாவலில் இரையைச் சாகடிக்கும் விலங்கு' என்று பொருள். இது தென் அமெரிக்காவில் அதிகமாகக் காணப்படும் சிறுத்தை இனம்.

மரங்களின் கிளைகளில் அமைதியாக உட்கார்ந்து, கீழே நடப்பதைப் பார்த்துக் கொண்டே இருக்கும். இரை தனக்கு நேராக வரும் வரை காத்திருந்து பின் ஒரே தாவலில் தாவி கொன்று தின்று விடும். இது சிங்கத்தைத் தவிர மற்ற எல்லா விலங்குகளையும் வேட்டையாடிக் கொல்லக் கூடியது.

கவிழ்த்துப் போட்ட

தவிர, ஆற்றங்கரையோரப் பாறைகளின் மீது படுத்துக் கொள்ளும். கரையோரம் வரும் மீன்களைத் முன்னங்காலால் ஒரு தட்டுத்தட்டி கொன்று அவற்றையும் தின்று விடும். முதலைகளையும் ஆமைகளையும்கூட இது உணவாக்கிக் கொள்ளும்.

● 'சிப்மங்க்' அணில் குடும்பத்தைச் சேர்ந்த விலங்கு. இவற்றின் தாடையில் பைகள் உண்டு. கொட்டைகள் தானியங்கள் விதைகள் பழங்கள் ஆகியவற்றைத் தன் கூட்டில் கொண்டு சேர்க்க தாடைகளில் உள்ள இப்பையைப் பயன்படுத்துகிறது. அணில் மரங்களில் வாழும் பழக்கமுடையது. ஆனால் சிப்மங்க் தரையில்தான் வாழ்கிறது. அபாயமென்றால் அணில்கள் மரங்களில் ஓடி ஏறிக் கொள்ளும். ஆனால் சிப்மங்க் பூமியின் கீழ் தோண்டியுள்ள தன் பொந்தை நோக்கி ஓடும்.

செப்டெம்பர் அக்டோபரில் மாரிக்காலத் தூக்கம் போட தன் பொந்துக்குள் போய்ப் படுத்தால் மார்ச் - ஏப்ரல் வரை தூங்கும்! சிப்மங்க்கின் பதுங்கு குழி இரண்டடி அகல ஆழத்தில் இருக்கும். இதனுள்ளே மாரிக்கால உணவாக தானியங்களைச் சேமித்திருக்கும். பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு மெத்தையாக நிறைய இலைகளையும் சேமித்திருக்கும்.




* மர்ரேஸ்

● 'மர்ரேஸ்' என்பது கடற்பறவை. அட்லாண்டிக் மற்றும் பசிபிக் கடற்பகுதிகளில் இதைப் பார்க்க முடியும். இந்தப் பறவை கடலோரத்தில் இருக்கும். மலை உச்சியில் கூடுகட்டி வாழும்.

தகவல்

மூன்று வாரம் ஆனதும் இதன் குஞ்சுகள் பறப்பதற்குத் தயாராகி விடும். ஆனால் அவற்றால் எளிதில் பறக்க முடிவதில்லை. இதனால் பெற்றோர் பறவைகள் கூட்டை விட்டு வெளியே போய் விடுகின்றன. சில நாட்கள் கழித்து தந்தைப் பறவை மட்டும் குஞ்சுகளைப் பார்க்க வருகிறது.

அப்போதும் குஞ்சுகள் பறக்காமல் இருந்தால், குஞ்சுகளை மலை உச்சியில் இருந்து அப்படியே கீழ் நோக்கித் தள்ளி விட்டு விடும்! மலை உச்சிக்கும் அதன் கீழே இருக்கும் கடல்க்கும் இடையேயான தூரம் 500 மீட்டருக்கும் அதிகமாக இருக்கும். இதனால் குஞ்சுகள் மேலிருந்து கீழே வருவதற்குச் சிறகுகளை விரித்து, பறந்தே ஆக வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின்றன. கடலில் விழும் பறவைகள் தந்தைப் பறவையுடன் நீந்திகரை சேர்கின்றன. முழு வளர்ச்சி அடையும் வரை அவை தந்தைப் பறவையுடனேயே வசிக்கின்றன.



* போர்ச்சுக்கீஸ் மேன் ஆஃப் வார்

தொப்பி?


● 'போர்ச்சுக்கீஸ் மேன் ஆஃப் வார்' (Portugese-man-O'-war) - இது ஒரு கடல் பிராணி. ஜெல்லி மீனின் மெகா ரகம். இது கவிழ்த்துப்போட்ட தொப்பியைப்போல், கரையை ஒட்டிய ஆழம் குறைந்த நீரில் இந்த ஜந்து மிதந்து வாழும். இது ஒரு பயங்கரமான 'அக்கு வாட்டிக் ஃபிஷ்.'

எல்லா மீன்களையும் போல் இதைச் சாதாரணமாக நினைத்து விடக்கூடாது. இதன் உடலின் ஒரு சிறு அங்கம் கடற்கரை மணலில் கிடந்து, அதை எதேச்சையாய் செருப்பின்றி மிதித்துவிட்டால் மறுகணம் ஐய்யோதான்.

தப்பித் தவறி ஸ்விம் சூட்டில் நீந்துகிற மனிதனை இந்த ஜெல்லி ஃபிஷ் செல்லமாய் தழுவிக் கொண்டால், அதன் கடும் விஷம் தாக்கி, உடல் குதறியதுபோல் ஆகி, உயிர் பிரிந்துவிடும்! ◎

ம. விவேக், குட்டம்





உருகிய

"பெர்ஸி, சாப்பிடப் போலாமா?"

"நீங்க கிளம்புங்க, நான் வரலை" என்றார் பெர்ஸி ஸ்பென்ஸர், "எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு."

"வேலை எப்பவும்தான் இருக்கும், அதுக்காகப் பட்டினி கிடப்பாங்களா?"

அக்கறையோடு கேட்டார் நண்பர், "ஜஸ்ட் பத்து நிமிஷம், சாப்டுட்டு வந்துடலாம், வா."

"வேணாம்ப்பா, அப்படிப் பசி எடுத்தா, என்கிட்ட ரெடிமேட் இன்ஸ்டன்ட் சாப்பாடு இருக்கு," என்று கண்ணடித்தார் பெர்ஸி, பாக்கெட்டிலிருந்து ஒரு சாக்லெட் பட்டையை எடுத்துக் காண்பித்தார்.

பெர்ஸி ஸ்பென்ஸர் ஓர் அறிவியல் நிபுணர். அப்போது அவர் ரேடார் தொழில்நுட்பத்தில் பல புதுமையான கண்டுபிடிப்புகளைச் செய்துகொண்டிருந்தார்.

ராடார் கருவிகள் இயங்குவதற்கு அடிப்படையான விஷயம், 'மைக்ரோவேவ்ஸ்' என்று அழைக்கப்படும் ரேடியோ அலைகள். அவற்றை உற்பத்தி செய்யும் கருவிக்குப் பெயர் மேக்னட்ரான்.

இந்த மேக்னட்ரான்தான், பெர்ஸி ஸ்பென்ஸரின் ஃபேவரிட் செல்லப் பிள்ளை. அதில் பல புதுமைகளைச் செய்து, குறைந்த நேரத்தில் நிறைய மேக்னட்ரான்களைத் தயாரிப்பதற்கான நுட்பங்களைக் கண்டுபிடித்திருந்தார் அவர்.

இதற்காக, அவர் பல மணி நேரம் மேக்னட்ரான்கள், மைக்ரோ அலைகளுக்கு மத்தியில் வேலை செய்யவேண்டியிருந்தது.

பெர்ஸி ஸ்பென்ஸர் அதைப் பற்றியெல்லாம் கொஞ்சம்கூடக்

அறிவியல் கதைகள்

கவலைப்படவில்லை. எல்லா அறிவியல் ஆராய்ச்சியாளர்களை யும்போல, உலகத்தின் அறிவு வளத்தை ஒரு சின்னத் துளியாவது பெருக்கிவிடவேண்டும் என்கிற முனைப்புடன் கடுமையாக உழைத்துக்கொண்டிருந்தார்.

மேக்னட்ரான் மீண்டும் இயங்கத் தொடங்கியது. சில தகவல்களைக் கவனமாகக் குறிப்பெடுத்துக்கொண் டார் பெர்ஸி ஸ்பென்ஸர்.

அப்போது, அவருடைய சட்டை

சாக்லெட்!

பாக்கெட் அருகே யாரோ சூடாகக் காப்பியைக் கொட்டியதுபோல் லேசான வெதவெதப்பு. பெர்ஸி அவசரமாக அங்கே தொட்டுப்பார்த் தார்.

ஆச்சர்யம், சில நிமிடங்களுக்கு முன்னால் அவருடைய பாக்கெட் டில் இருந்த கெட்டியான சாக்லெட், இப்போது உருமாறி யிருந்தது. கொழ கொழா என்று கூழ்போல நெகிழ்ந்து ஓடியது.

'இந்த சாக்லெட்டுக்கு என்னாச்சு? ஏன் இப்படித் திடீர்னு உருகிடுச்சு?' குழப்பத்தில் தலையைச் சொறிந்தார் பெர்ஸி ஸ்பென்ஸர்.

சட்டென்று அவருக்கு விஷயம் புரிந்தது. 'இந்த மைக்ரோவேவ் அலைகள்! அதன் சூட்டில் சாக்லெட் உருகிவிட்டதோ?'

மைக்ரோவேவ் அலைகளுக்குப் பொருள் களை இலேசாகச் சூடாக்கும் ஆற்றல் உண்டு என்பது தெரியும். ஆனால், அவற்றின் திறனை மேலும் அதிகரித்தால், இப்படி ஒரு பெரிய கட்டி சாக்லெட்டை உருகவைக்கும் அளவுக் குப் பயன்படுத்தமுடியுமா? ஆச்சர்யமாக இருக் கிறதே!

பெர்ஸி இதை மேலும் பரிசோதனை செய்து பார்த்துவிடத் தீர்மானித்தார்.

அடுத்த நாள், எங்கேயோ தேடி அலைந்து, காய்ந்துபோன மக்காச்சோள விதைகளைத் திரட்டிவந்தார் பெர்ஸி ஸ்பென்ஸர். இவற்றை ஒரு சிறிய பாத்திரத்தில் கொட்டி, மேக்னட் ரானுக்கு முன்னால் வைத்தார்.

மேக்னட்ரான் இயக்கப்பட்டது. அதிலிருந்து வெளிப்படும் மைக்ரோ அலைகளின் திறனைக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தார் பெர்ஸி ஸ்பென்ஸர்.

அவ்வளவுதான். 'பட் பட்' என்று யாரோ தீபாவளிக்குத் துப்பாக்கிச் சுடுவதுபோன்ற சத்தம் அந்த அறை முழுவதும் ஒலித்தது. காய்ந்த மக்காச் சோள விதைகள் நன்கு வறுபட்டு பாப்கார் னாக அங்கும் இங்கும் சிதறின.

'காய்ந்த விதைகளைக்கூட இவ்வளவு



என். சொக்கன்

நன்றாக, அதுவும் இத்தனை வேகமாக வறுக்கும் அளவுக்கு மைக்ரோ அலைகளுக்கு ஆற்றல் உண்டா ? இந்த விஷயம் இவ்வளவு நாளாக நமக்குத் தெரியாமல் போய்விட்டதே!' என்று வியந்தார்.

அடுத்த நாள், ஒரு கோழி முட்டையை மேக்னட்ரான் எதிரில் வைத்தார் பெர்ஸி. அதன்மீது மைக்ரோஅலைகள் பாய்ச்சப்பட்டன.

சில விநாடிகள்தான்... அந்த முட்டை சூடேறிப் 'படார்' என்று வெடித்தது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள்மீது பட்டுச் சிதறியது.

உடனே, அங்கிருந்த எல்லோரும் பெர்ஸி ஸ்பென்ஸரைக் கோபித்துக்கொண்டார்கள். 'சீரியஸான ஆராய்ச்சி நடக்கற இடத்தில முட்டையும் பாப்கார்னும் எதுக்கு? இதெல்லாம் அடுத்தவங்களுக்கு இடைஞ்சலா இருக்கில்ல?'

'ஃப்ரெண்ட்ஸ், இது இடைஞ்சல் இல்லை, ஒரு மிகப் பெரிய கண்டுபடிப்பு! மைக்ரோவேவ் தொழில்நுட்பத்தைச் சமைக்கறதுக்குப் பயன்படுத்தமுடியும்ன்னு இந்த ஆராய்ச்சியின் மூலமாக கண்டுபிடிச்சிருக்கேன்' என்றார் பெர்ஸி கூலாக.

மற்ற அறிவியலாளர்களுக்குப் பெர்ஸி என்ன சொல்கிறார் என்பது விளங்கவில்லை. ஆகவே, தமது தொழில்நுட்பத்தை இன்னும் மேம்படுத்துவதற்கான தீவிர ஆய்வுகளில் இறங்கினார் பெர்ஸி ஸ்பென்ஸர்.

விரைவில், மைக்ரோஅலைகளைப் பயன்படுத்திச் சாப்பாட்டைச் சீக்கிரமாகவும் சிறப்பான முறையிலும் சமைக்கமுடியும் என்று பெர்ஸி ஸ்பென்ஸர் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்தார். அதன் பலனாக, உலகின் முத லாவது 'மைக்ரோவேவ் அவன்' அறிமுகப்படுத்தப்பட்டது.



காய்ந்த மக்காச்சோள விதைகள் நன்கு வறுபட்டு பாப்கார்னாக அங்கும் இங்கும் சிதறின.

பெர்ஸி ஸ்பென்ஸரின் வேலை, ராடார் ஆராய்ச்சி. அதற்கு நடுவே ஒரு சாக்லெட் உருகியதை வைத்து மைக்ரோவேவ் சமையல் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று அவருக்கு எந்த அவசியமும் இல்லை.

ஆனால், அறிவியலாளர்கள் ஒருபோதும் அப்படி நினைக்கமாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை உலகில் எல்லாமே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை; ஒன்றைத் தேடும்போது இன்னொன்று அகப்படுவது ரொம்ப சகஜம். எந்நேரமும் எதையாவது புதிதாகத் தேடிக்கொண்டிருக்கிற துடிப்புதான், விஞ்ஞானிகளுக்கு இப்படி எதிர்பாராத பரிசுகளைக் கொண்டுவந்து தருகிறது!

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1351. ஆர். ஸ்ரீவர்ஷா, ஆறாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை
1352. மா.அசோக்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, உத்திரமேரூர்.
1353. மு.ஸ்வேதா, ஐந்தாம் வகுப்பு, அக்ஷயா அகாடமி மே. நி. பள்ளி, பழனி.
1354. தே.சேதுபதி, ஏழாம் வகுப்பு, புனித ஆன்ட்ரூஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருமாந்துறை
1355. இரா. ரமேஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, காளப்பட்டி
1356. வி.அலமேலு, மூன்றாம் வகுப்பு, அல்வேர்னியா மெட்ரிக் பள்ளி, கோவை
1357. கு.ரா.நிவேதிதா, ஆறாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் பள்ளி, பொங்கலூர்
1358. கு.ரா.நந்தினிமாய், நான்காம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் பள்ளி, பொங்கலூர்
1359. இரா.சேஷன், எட்டாம் வகுப்பு, ஜான்டூயி மெட்ரிக் பள்ளி, பண்ருட்டி
1360. பழ.ராகவேந்திரா, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீமாணிக்கம் மெட்ரிக் பள்ளி, விராச்சிலை
1361. எம்.அமிர்தா, முதல் வகுப்பு, ஸ்ரீ சங்கரா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, பொழிச்சலூர்
1362. எஸ்.சதீஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு, சின்னசாமி அம்மாள் நகராட்சி மேல்நிலைப் பள்ளி, திருப்பூர்
1363. எஸ்.சந்தியா, ஏழாம் வகுப்பு, மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, திருப்பூர்
1364. எஸ்.தீபக்குமார், ஆறாம் வகுப்பு, கமலா சுப்ரமணியம் பள்ளி, தஞ்சாவூர்
1365. ஆர்.செரின் லென்ஸி மேரி, மூன்றாம் வகுப்பு, டான் பாஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
1366. ஆர்.வியோன் கென்னடி, நான்காம் வகுப்பு, டான் பாஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
1367. உ. குகப்ரியா, ஏழாம் வகுப்பு, சிறுமலர் மடம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவலம்
1368. எஸ்.கோகுல், முதல் வகுப்பு, அசோகா மெட்ரிகுலேஷன் பள்ளி, மன்னார்குடி
1369. கே.கிரிபிரசாத், ஜெயராம் வித்யாபவன் மெட்ரிக் பள்ளி, கரூர்





1370. மோ.விஷாலி, ஐந்தாம் வகுப்பு, விக்டோரியா மெட்ரிக் மேல்நிலைப் பளளி, காஞ்சிபுரம்

1371. ம.நித்யலக்ஷ்மி, ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர்

1372. ஆர்.அப்ரிடா, எட்டாம் வகுப்பு, லாரல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

1373. பா.ரா. ஸ்நேகா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீரங்கா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருவரங்கம்

1374. ச.மதுரமோகனா, ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

1375. மு.ஸ்ரீநிதி நான்காம் வகுப்பு, ரோஸ் மேரி மாடல் பள்ளி, சங்கர் நகர்

1376. த.பூர்ணிமா, மூன்றாம் வகுப்பு, புதூர் புதிய நடுநிலைப் பள்ளி, கடையநல்லூர்

1377. ஜி.கௌதம் பிரசாந்த், ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மே.நி. பள்ளி, கோவை

1378. இ.சந்தியா, ஆறாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

1379. செ.சஞ்சய் அரவிந்த், எட்டாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மே.நி. பள்ளி, கோவை

1380. க.சந்தியா, ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

1381. ம.கவிதா, ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

1382. ஜி.எஸ்.ஸ்ரீமதி, ஒன்பதாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோபி

1383. பெ.ராமன், பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

1384. மோ.நவீன் கிருஷ்ணா, ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை

1385. எம்.சமீனா சஹானாஸ், ஏழாம் வகுப்பு, அமல்ராஜ் மேல்நிலைப் பள்ளி, மேலத் திருப்பூந்துருத்தி

1386. பா.கோகுல், பதினொன்றாம் வகுப்பு, ஜி.பி. மேல்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை

1387. பா.கிஷோர், ஒன்பதாம் வகுப்பு, ஜி.பி. மேல்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை

1388. ஏ.டி. ஆதித் ப்ரணவ், டி.ஏ.வி. பெல் பள்ளி, ஆற்காடு

1389. பி.புனித், முதல் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, ஹாசன், கர்நாடகா

1390. க. ஆகாஷ், நான்காம் வகுப்பு, ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி

1391. சி.பத்ரிநாராயணன், இரண்டாம் வகுப்பு, பாரதியார் மெட்ரிக் பள்ளி, கூடுவாஞ்சேரி

1392. எம்.தினமலர், ஏழாம் வகுப்பு, க்ரீன் வேலி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, முகப்பேர்

1393. எம்.தினமணி, பதினொராம் வகுப்பு, க்ரீன் வேலி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, முகப்பேர்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1394. எஸ்.நதின்ஷா, முதல் வகுப்பு, காஞ்சி ஸ்ரீ சங்கரா அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருச்செந்தூர்

1395. ம.பார்த்திபன், இரண்டாம் வகுப்பு, என்.எஸ்.என். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

1396. எஸ்.விஸ்வா, ஆறாம் வகுப்பு, நடேசன் வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, சென்னை



1397. எஸ்.ரூபஸ்ரீ, மூன்றாம் வகுப்பு, நடேசன் வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, சென்னை


1398. ரா.சுரேகா, ஐந்தாம் வகுப்பு, நடேசன் வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, சென்னை

1399. ஜி.மணிபூஷணம், எட்டாம் வகுப்பு, பி.யு.எம். பள்ளி, ஓசூர்

1400. ஜி.நந்தினி, ஆறாம் வகுப்பு, பி.யு.எம். பள்ளி, ஓசூர்

நாயின் தந்திரம்!

கதை: நிருபமா
படம்: பிள்ளை



வரலாறு

சிந்தனைச் சிற்பிகள்!

கௌதம்ராம்

உலகப் புகழ் பெற்ற தத்துவ மேதைகள் சிலரைப் பற்றித் தெரிந்து கொள்வோமா..?

சீனத் தத்துவ ஞானி கன்ஃபூஷியஸ்

சீன மொழியில் அவருடைய உண்மையான பெயர் Kung Fu Tzu. சீன வரலாறும், தொல்பொருள் ஆய்வியலும் படித்தவர். இளைஞராக சீன அரசாங்கத்தில் பணியில் சேர்ந்து, மன்னருக்கு நீதிபரிபாலன ஆலோசகராகப் பணியாற்றினார். சீனாவின் பாரம்பரிய கவிதைகள், கதைகள், மாமேதைகளின் வாழ்க்கை வரலாறுகள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்ததுடன், அவற்றைத் தொகுத்து புத்தகமாகவும் எழுதினார். பணி ஓய்வு பெற்றபின் ஒரு தத்துவப் பள்ளியை ஆரம்பித்து, தமது தத்துவங்களை மாணவர்களுக்கு போதித்து, அவற்றை மக்களிடையே பரப்புவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார். அவரது தத்துவங்களைப் பின்பற்றுபவர்கள், கன்ஃபூஷியனிசம் என்ற மதத்தைப் பின்பற்றுபவர்களாகக் கருதப்படுகிறார்கள். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே கன்ஃபூஷியஸ் மறைந்தாலும், இன்றும் சீனா மட்டுமின்றி தைவான், ஜப்பான், கொரியா, சிங்கப்பூர், வியட்னாம் ஆகிய நாடுகளிலும் கன்ஃபூஷியனிசம் பின்பற்றப்படுகிறது.



* கன்ஃபூஷியஸ்

கிரேக்கத் தத்துவ ஞானி சாக்ரடீஸ்!

ஓர் அரசாங்கம் எப்படி செயல்பட வேண்டும் என்று மட்டுமல்ல; மனித வாழ்க்கை ஒரு நல்ல நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அழுத்தமான கருத்து கொண்டிருந்தார் சாக்ரடீஸ். அவரது புரட்சிகரமான கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் இளைய தலைமுறையினரின் மனத்தைக் கெடுத்து, மத ரீதியான நம்பிக்கைகளில் மூக்கை நுழைக்

கிறார் என்று குற்றம் சாட்டினார்கள். இதன் காரணமாக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது! விஷம் கொடுத்து கொல்லப்பட்டாலும், அவரது தத்துவங்கள் இன்றும் பல தத்துவங்களின் அஸ்திவாரமாக உள்ளன.

சாக்ரடிஸின் சீடர்

ஏதென்ஸ் நகரத்தின் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்த பிளேட்டோ, சாக்ரடீசின் தலைமைச் சீடர். சாக்ரடீஸின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டபோது பிளேட்டோவுக்கு 28 வயது. தமது ஆசிரியரது மரணத்தால் மனம் உடைந்த பிளேட்டோ, பாபிலோனியா, எகிப்து, லிபியா, இத்தாலி என்று பல நாடுகளுக்குப் பயணம் செய்து, பின்னர் ஏதென்ஸ் திரும்பினார். தாம் உணர்ந்த தத்துவங்களையும், தமது ஆசிரியர் கூறிய தத்துவங்களையும் சொல்லித்தர ஒரு பள்ளியை ஆரம்பித்தார். அவருடைய மாணவர்களில் முதன்மையானவர் அரிஸ்டாட்டில்!

பிளேட்டோவைத் தொடர்ந்து...


ஏதென்ஸின் அரசவை மருத்துவர் மகனாகப் பிறந்தவர் அரிஸ்டாட்டில். பிளேட்டோவின் மாணவரான இவர், பின்னர் ஆசிரியராகவும் பணியாற்றினார். இளவரசர் அலெக்சாண்டரின் ஆசிரியர் ஆனார். அலெக்சாண்டர் பிற்காலத்தில் மாமன்னராவதற்கு ஆசிரியர் அரிஸ்டாட்டிலின் தாக்கம் முக்கியமான காரணம் என்று, வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அலெக்சாண்டர் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அரிஸ்டாட்டில் ஒரு பள்ளியை ஆரம்பித்தார். அரசியல், இயற்கை அறிவியல், நன்னெறிகள், ஜனநாயகம், மன்னராட்சி என்று பல்வேறு விஷயங்கள் குறித்தும் விரிவாக தமது எண்ணங்களை எழுதி வைத்தார். அவை இன்றும் போற்றி மதிக்கப்படுகின்றன.



* மாக்கியவல்லி



* அரிஸ்டாட்டில்



* சாக்ரடீஸ்



* பிளேட்டோ

அரசியல் ஆர்வலர்

இத்தாலி நாட்டில் பிறந்த மாக்கியவல்லி, தத்துவ மேதை மட்டுமில்லை; கவிஞர், நாடக ஆசிரியர், இசைக் கலைஞர் என பன்முகங்கள் கொண்ட மனிதர். தமது 25வது வயதில் இவர் அரசியலில் இறங்கி, நான்கு ஆண்டுகளில் ஃப்ளாரன்ஸ் நகரத்தின் துணை ஆளுனர் ஆனார். பத்தாண்டுகளுக்கும் மேலாக பதவி வகித்த பிறகு, அரசியல் மாற்றங்கள் காரணமாக பதவியைத் துறந்து

பொது வாழ்விலிருந்து விலகி, தம் எண்ணங்களை எழுத்தில் வடிக்க ஆரம்பித்தார்.



* வால்டேர்


ஃபிரெஞ்சு மேதை

18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வால்டேர். அவர் ஒரு தத்துவஞானி மட்டுமில்லை; சிறந்த எழுத்தாளரும்கூட. அறிவியலிலும் ஆர்வம் கொண்டிருந்த வால்டேரின் நகைச்சுவை உணர்வு மிகுந்த அரசியல் விமர்சனங்கள், மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. ஆனால் ஃபிரான்ஸ் ஆட்சியாளர்களால் அவற்றை ஜீரணிக்க முடியவில்லை. அதனால், இங்கிலாந்துக்கு இடம் பெயர்ந்தார். 1729ல் பாரிஸ் நகரத்துக்குத் திரும்பிய வால்டேர், பல இலக்கியங்களைப் படைத்தார்.

கம்யூனிசத் தத்துவ மேதை

கார்ல் மார்க்ஸ், இப்போது ஜெர்மனியில் உள்ள 'டிரையர்' என்ற ஊரில் பிறந்தார். தத்துவத்தை சிறப்புப் பாடமாகப் படித்து, தமது 23வது வயதிலேயே டாக்டர் பட்டம் பெற்றார். பாரிசுக்கு வந்த மார்க்ஸ், ஃப்ரெடரிக் எங்கல்ஸுடன் இணைந்து 'கம்யூனிஸ்ட் மானிஃபெஸ்டோ' என்ற நூலைப் படைத்தார். 'முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையிலான பொருளாதார ரீதியிலான இடைவெளியே, போராட்டங்களுக்கும், புரட்சிகளுக்கும் காரணம்' என்று கூறினார் மார்க்ஸ்.

* கார்ல் மார்க்ஸ்



இந்தியாவில்...

நம் நாட்டில் ஆன்மீகத் தத்துவங்களை போதித்த மேதைகள் பலர் உண்டு. கி.மு. 528 மே மாதத்தில் ஓர் இரவில் போதி மரத்தின் அடியில் ஞானம் பெற்ற சித்தார்த்தன், அதன் பிறகு புத்தர் (தன்னை உணர்ந்தவர்) ஆனார். ராஜகுமாரனான சித்தார்த்தனை சாமானிய மக்கள் படும் துயரங்களும், வலிகளும் மிகவும் பாதித்தன. உண்மையைத் தேடி, அவரே புத்தரானார். தாம் உணர்ந்த உண்மைகளை உலக மக்களுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தார். அவருக்குப் பின் அவருடைய சீடர்கள், புத்தரின் தத்துவங்களை மக்களிடம் பரவலாக எடுத்துச் சென்றார்கள். சீனா மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் முக்கிய மதமாக இன்றும் புத்த மதம் விளங்குகிறது.

● வைசாலி மன்னரின் குடும்பத்தில் பிறந்த வர்த்தமானன், பின்னாளில் மகாவீரர் ஆனார். அவர் தோற்றுவித்த ஜைன மதம் இன்றும் பின்பற்றப்படுகிறது.

கேரளாவில், 'காலடி'யில் பிறந்த ஆதிசங்கரர், இந்தியா கண்ட மாபெரும் தத்துவ மேதை. இவரது தத்துவம் 'அத்வைதம்' என அழைக்கப்படுகிறது.


இந்த வரிசையில், மகான் ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்தர், ரமண மஹரிஷி என்று மிக நீண்ட பட்டியல் நம்மிடம் உண்டு. தத்துவங்களின் தாய்வீடு இந்தியா என்பது நம் பெருமையல்லவா? ●

கிறிஸ்டோபர் கொலம்பஸ் கிழக்காசியாவுக்கு கடல்வழிப் பாதை கண்டுபிடிக்க, 1492ம் ஆண்டு தம் பயணத்தைத் தொடங்கினார். ஸ்பெயின் மன்னரின் உதவியுடன் புறப்பட்ட அவர், தம் கணிப்பில் ஏற்பட்ட தவறுகளால், மேற்கிந்தியத் தீவுகளைச் சென்றடைந்தார். புதிய உலகத்தை கண்டுபிடித்த அவருக்கு, ஐரோப்பா திரும்பியதும் மிகப் பெரும் வரவேற்புக் கிடைத்தது. ஸ்பெயின் அரசர் மிகவும் பாராட்டினார். அந்நாட்டின் தலைமைப் பாதிரியார், இதனைக் கொண்டாடும் விதத்தில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஸ்பெயின் நாட்டின் சிறந்த வியாபாரிகள், அறிஞர்கள், உயரதிகாரிகள், செல்வந்தர்கள், பெரும் நிலப் பிரபுக்கள் என பல்வேறு தரப்பினரும் அந்த விருந்துக்கு அழைக்கப்பட்டார்கள். வந்திருந்த அனைவரும் கொலம்பஸின் சாதனையைப் புகழ்ந்தார்கள். இதனால் அரசாங்கத்துக்கு வரப்போகும் ஆட்சி விரிவாக்கம், தொழில் விரிவாக்கம் மற்றும் வியாபாரிகள் பெறக்கூடிய நன்மைகள் ஆகியவை பற்றிப் பலரும் பேசினார்கள்.

கொலம்பஸின் மேல் பொறாமை கொண்ட ஒரு சிலரும் இந்த விருந்தில் இருந்தார்கள். அவர் அடைந்த புகழையும், அரசாங்கத்தில் அவருக்குக் கிடைத்த அங்கீகாரத்தையும் அவர்களால் தாங்க முடியவில்லை. எனவே அவரை இழிவு படுத்த நினைத்து, "எங்கள் ஸ்பெயின் நாடு மிகச் சிறந்த அறிவாளிகளையும்,

முட்டையை



குட்டிக் கதை

நிற்க வை!

உத்ரா

அறிஞர்களையும் உடையது. எங்கள் அரசர் செய்த பண உதவியா லேயே, நீங்கள் கடல் பயணம் புறப்பட்டு மேற்கிந்தியத் தீவுகளை அடைந்தீர்கள். நீங்கள் கண்டுபிடிக்கவில்லை என்றாலும் எங்கள் ஸ்பெயின் நாடு ஒன்றும் குறைந்து போயிருக்காது'' என்று வெறுப்பு ததும்பப் பேசினர். இதனைக் கேட்ட கொலம்பஸ், அங்கிருந்த பணியாளரிடம் ஒரு முட்டையை எடுத்து வருமாறு ஏவினார். கொலம்பஸின் இச்செய்கைக்குக் காரணம் புரியாமல் அனைவரும் விழித்தனர்.

பணியாளர் கொண்டு வந்த முட்டையை கையில் வாங்கிய கொலம்பஸ், அவையோரை நோக்கி, ''இந்த முட்டையை நேராக நிற்க வைக்க உங்களால் முடியுமா'' என்றார். விருந்தினர் ஒவ்வொருவராக முயன்றார்கள். யாராலும் முடியவில்லை. தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டனர் அனைவரும்.

அப்போது ''நான் இந்த முட்டையை இப்போது நிற்க வைக்கிறேன். அதனைப் பார்த்தபின், இது என்ன பெரிய வேலை? எங்களாலும் செய்ய முடியுமே என்று சொல்லக்கூடாது'' என்ற கொலம்பஸ், அந்த முட்டையைக் கையில் எடுத்தார். மேசை மேல் தட்டி, அதன் ஓர் முனையை சிறிது உடைத்தார். முனை உடைந்ததால் அந்த முட்டை, நிற்க வைத்ததும் நின்றது. இதனைப் பார்த்தவர்கள் கோபம் கொண்டார்கள். ''எங்களுக்கும் இதுபோல் முட்டையை நிற்க வைக்கத் தெரியும், நீயென்ன சாதித்து விட்டாய்'' எனச் சீறினார்கள்.

கொலம்பஸ் நிதானமாகச் சொன்னார்: ''உங்களுக்குத் தெரியும் என்றால், நீங்கள் முதலிலேயே செய்திருக்கலாமே? பின்னால் பேசி என்ன பயன்? நான் கடல் பயணம் மேற்கொள்ளும் முன், 'கடல்வழி கண்டு பிடிக்க முடியாது; அரசர் பண உதவி செய்வது வீண்' என்று தடுத்தீர்கள். ஆனால் இன்றோ, என்னுடைய வெற்றியைப் பார்த்து பொறாமைப்படுகிறீர்கள். இது பெரிய காரியம் அல்ல என்கிறீர்கள். உங்களால் முடியும் என்றால், நீங்களே அதனைச் செய்திருக்கலாமே!''

அதைக் கேட்டவர்கள் தங்கள் தவறை உணர்ந்து மனம் மாறினார்கள். கொலம்பஸுக்கு உரிய புகழ் கிடைக்குமாறு செய்தார்கள். ●



அடுத்த வேலை!

கதை: சித்ரா சிவகுமார், ஹாங்காங்.
படம்: ராம்கி.




சில நொடிகளில்...
எஜமான், அடுத்த வேலை என்ன?
தோட்டம் ரெடியா?
அங்கே பாருங்க?
அழகான தோட்டம். நீரூற்று இருந்தா சூப்பரா இருக்கும்.
அவ்வளவு தானே, இதோ நீரூற்று!
சோமு வியக்க...
அட... அடுத்து என்ன சொல் வது?
காட்டிலிருந்து நல்ல மரம் கொண்டு வந்து அழகான ஒரு வீடு கட்டு!
உத்தரவு எஜமான்!
சிறிது நேரத்தில்...
எஜமான் வீடு ரெடி!
நிஜமாகவா? சொல்றே?
ஆமாம்! திரும்பிப் பாருங்க!
சூப்பர். சரி; பக்கத்துலியே ஒரு குளத்தை வெட்டு!
அடுத்து வந்தால் என்ன சொல்வது! இல்லாவிட்டால் விழுங்கிவிடுமே!
சிறிது நேரத்தில் வந்த பூதம்...
முதலாளி அடுத்த வேலை என்ன?
வீட்டு வாசல்ல உயரமான கம்பை நடு...
பூதம் வேகமாய்...
முதலாளி வேலை முடிஞ்சுது.
அதில ஏறி ஏறி இறங் கிக்கிட் டிரு...
ஆ...
நான் சொல்ற வரை நிறுத்தக் கூடாது..
அப்பாடா... தப்பிச்சேன்.

உருளு கின்ற சக்க ரங்கள்
உண்டு மூன்று; அதனால்
உருகு வெயிலில் ஓங்கு மழையில்
உலவும் எங்கும் ஆட்டோ!

தங்கம் போல மஞ்சள் வண்ணம்
தாங்கும் அங்கம் பாதி.
சிங்கம் போல், கம்பீரமாய்ச்
செல்லும் சந்து பொந்தில்.

புத்த கங்கள் முதுகு நோக
மெத்தச் சுமக்கும் சிறுவர்
மொத்த மாக ஏறிக் கொள்ள
மகிழ்ச்சி குலுங்கச் செல்லும்.

மலர்கள் போன்ற மழலைக் கூட்டம்
மடியில் தாங்கும் தாய்போல்.
கலகலக்கும் குழந்தைகளை
கவனத் தோடு காக்கும்

நடப்பதற்கு தெம்பில் லாத
வயதில் மூத்த பெரியோர்
கடைக்குச் சென்று திரும்பு தற்கு
கைகொடுக்கும் ஆட்டோ

மூலை முடுக்கில் உள்ள இடத்தின்
முகவரியும் தெரிந்து
காலை, மாலை, இரவு என்று
காலந்தோறும் உதவும்.

- சி.விநாயகமூர்த்தி



ஆட்டோ!

வரம்



கடுந்தவம் இயற்றியது ஆறு!

காட்சி கொடுத்த கடவுள் கேட்டார்;
"மணலும் மணிநீரும்
கொடுத்திருக்கிறேனே,
பின்னென்ன வேண்டும்?"

கேட்டல்!

"வேண்டித் தவம் இருக்கவில்லை;
வேண்டாத் தவம் இருந்தேன்"
என்றது ஆறு.

வியந்து பார்த்தார் கடவுள்;
தொடர்ந்து சொன்னது ஆறு :
"எனக்கு மணலும் வேண்டாம்;
மணிநீரும் வேண்டாம்!
இரண்டுமே எனக்குப்
பெரிய பிரச்னை"
கடவுள் திகைப்படைந்தார்!

- எஸ்.சுதாகர், உ. எண் 970,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
ஈரோடு

கவிதைப் பூங்கா

ஒருநாளும் குளிக்காமல் இருந்தி டாதே!
உடலினிலே அழுக்கைநீ சேர்த்தி டாதே!
அருவிதனில் குளித்திட்டால்
நோய்கள் வாரா;
ஆற்றினிலே குளிப்போருக்கு
அழகும் சேரும்;
பெருநகர வீடுகளில் வாழ்ந்திட் டாலும்
பெய்கின்ற குழாய்நீரில்
குளித்தல் வேண்டும்;
ஒருபோதும் வெந்நீரில் பழக வேண்டாம்;
உன்னுடலை இயற்கையுடன்
பழக்கி வாழ்வாய்!

- கே.பி. பத்மநாபன்,
கோவை

குயில்கூவும் விடியலிலே
எழுதல் வேண்டும்;
குளிர்ந்தநல் நீர்கொண்டு
குளித்தல் வேண்டும்;
வெயில்மழையோ கடுங்குளிரோ
பாரா தென்றும்
விடிகாலை நேரத்தில் குளித்தால், தம்பி!
பயில்கின்ற பாடமெல்லாம்
மனத்தில் நிற்கும்;
பகல்முழுவதும் புத்துணர்வும்
ஓங்கும், திண்ணம்!
துயில் நீங்கக் குளித்த பின்பு
கதிரோன் தன்னை
தூயநெஞ்சம் கொண்டென்றும்
தொழுதல் நன்று!



நனி நீராடு!



காட்டில் வசித்த குழந்தை!

- ஆர்.எஸ்.ஆர்.

ஜங்கிள் புக்

ஆசிரியர் : ருட்யார்ட் கிப்ளிங் (தமிழில் : சென்னி) வெளியீடு: ப்ராடிஜி, நியூ ஹொரைசன் மீடியா பிரைவேட் லிமிடெட், எண் : 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-15. விலை ரூ.25/-

இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற முதல் ஆங்கிலப் படைப்பாளி ருட்யார்ட் கிப்ளிங். விலங்குகளுக்கும் நேசம் உண்டு என்கிற அடிப்படையில், அழகான கற்பனை இந்த நூல். காட்டில் கொடிய விலங்குகளுக்கு மத்தியில் வசிக்கும் ஒரு குழந்தை மீண்டும் பெற்றோரை வந்தடையும் கதை. மிகப்பிரபலமான இந்த 'ஜங்கிள் புக்'கை, சுருக்கமான வடிவில் சுவை குன்றாமல் தமிழில் தந்திருக்கிறார் சென்னி. நல்ல முயற்சி!



வானகத்தில் ஒரு கானகம்

'குறிஞ்சிச் செல்வர்' கொ.மா.கோதண்டம் வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ், 'கோனார் மாளிகை', எண்:25, பீட்டர்ஸ் சாலை, சென்னை-15. விலை ரூ.35/-

சிறுவர்களுக்கான பதினைந்து கதைகள்! காடுகளை நிலைக்களமாகக் கொண்டு அமைந்துள்ள இந்தக் கதைகளில், விலங்குகள் பேசுகின்றன, நற்குணங்களைப் பின்பற்றுகின்றன; பிறருக்கு உதவுகின்றன; ஆபத்தில் இருந்து காக்கின்றன. இப்படி, அடைய வேண்டிய நல்ல தன்மைகளையும், காட்டில் எதிர்ப்படும் ஆபத்துகளில் இருந்து தப்பும் வழியையும் கதைவழியே அழகுற வடித்திருக்கிறார் ஆசிரியர். காட்டின் வசீகரத்தை சுவாரஸ்யப்படுத்தும் கதைகளின் வழியே வெளிப்படுத்துவதில், ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார். வாசிக்க வேண்டிய புத்தகம்.



அழகு!

ஓநாயைக் கண்டதும் முட்களைச் சிலிர்த்தது முள்ளம்பன்றி. அதைக் கண்டு பதறிய ஓநாய், 'அஞ்சாதே.உன் அழகைக் கண்டு ரசிக்கவே நின்றேன்' என்றது. 'என்ன அழகா?' வியப்பாய்க் கேட்டது முள்ளம்பன்றி. 'ஆமாம். அந்த அழகைக் கெடுப்பது உன்முட்கள்தான்' என்றது ஓநாய். அதைக்கேட்ட முள்ளம்பன்றி, வேகவேகமாய் ஓடியது. உடலிலிருந்த முட்களை வெட்டிக்கொண்டு வந்து, 'இப்போது அழகாயிருக்கிறேனா?' என்றது. அதன்மேல் வேகமாய்ப் பாய்ந்தபடியே சொன்னது ஓநாய்: 'அழகா மட்டுமில்லே; சாப்பிட வசதியாவும் இருக்கே.'

- ***சி.பி.செந்தில்குமார், சென்னிமலை.***

கதை மாலை

படிப்பினை தந்த பகுதி!

● நம் உடலின் வெப்பநிலை 98.4 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்க வேண்டும்; இது கூடினால்தான் ஜுரம் வருகிறது என்பதைக் குறிப்பெடுத்துக் கொண்டேன். மேலும், ஃபாரன் ஹீட் செல்சியஸ் பற்றிய குழப்பம் வராமல் இருக்க, அழகான ஃபார்முலா கொண்டு விளக்கியது சிறப்பு. - **கே.எஸ்.யோகேஷ்வரன், உ. எண் 146, திருச்சி** ● சூரியனையும் நிழலையும் மையக் கருத்தாக்கி, அதற்கேற்ற பாத்திரப் படைப்புகளைக் கொண்ட இரண்டாம் பரிசுக் கதை அருமை. - **ஆர்.ஜி.ஏ.விஜய்சாய் பாலா, திருச்செந்தூர்** ● பட்டிமன்றம் பகுதியில், மாணவர்கள் விவாதித்த விதம் மிக அருமை. அதோடு நடுவரின் தீர்ப்பும் நன்றாக இருந்தது. இதைப் படிக்கும்போது, பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் மீதும், ஆசிரியர்கள் மீதும் தனி மரியாதை ஏற்படும். - **ஆர்.பிருந்தா, மதுரை** ● அறிவியல் கதை, அறிவுரைக் கதை, நாடோடிக் கதை... இவை வெகு ஜோருங்க. இலகுவான கதைகளாக இருந்தாலும், அழுத்தமான பதிவுகள். - **ஆர்.கே.கந்தரூபி, மேலகிருஷ்ணன்புதூர்** ● மழைக்கால நோய்கள்! டாக்டர் பக்கம், காலத்துக்கேற்ற பலனுள்ள தகவல், எச்சரிக்கையாக இருக்க நல்ல வழிகாட்டி! - **ஹேமமாலினி, உ. எண் 518, சென்னை** ● அன்பு தியாகம், சேவை - இவற்றை சொத்தாகப் பாவித்து, தேசத்துக்கு அர்ப்பணித்த நேருமாமாவைப் பற்றி தலையங்கத்தில் படித்து பூரித்துப்போனேன்! - **ஆர்.ஜி.ஜே.ஜெய்ஹரிதா, செல்வமருதூர்** ● எப்படி யானையின் எடையினைச் சுலபமாகக் கண்டு பிடிப்பது என்பதை, கதை வழியே சொன்ன பெரியவரின் அறிவு வியக்க வைத்தது. - **ஆர்.அம்பிகா, மதுரை** ● தமிழமுது வரிசையில், எலுமிச்சைக்கும், பாம்புக்கும் ஒப்புமைப்படுத்தி, சிலேடையாக... காளமேகப் புலவரின் பாடலுக்கு சுகுணா விளக்கம் தந்ததை வெகுவாக ரசித்து மகிழ்ந்தேன். - **ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி** ● நிழல் சொல்லும் பாடம் என்னும் கதை, எனக்கும் பாடமாக அமைந்தது.- **ந.பிருந்தா, உ. எண் 1098, மயிலாடுதுறை** ● காரணம் பகுதியின் மூலமாக பல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான காரணங்களை அறிந்து கொண்டேன். - **எஸ்.வினித் மாதவன், மதுரை** ● ஆசுகவியை மறவாத கோகுலத்துக்கு அன்பு வாழ்த்துக்கள்! உழைப்பும் சேமிப்பும் - நமக்கு இரு கண்களாக இருந்தால் - வாழ்வில் தினமும் மகிழ்ச்சிதான். புல்லையும் சேமிக்கலாம். படிப்பினை தந்த பகுதி. - **எஸ்.வளர்மதி, கன்னியாகுமரி** ● சிரிப்பலை பொங்க வைத்ததுடன், வீட்டைக் காக்கும் நாயை கோதுமைக்கு காவல் போட்ட சிரிப்பு ட்ரீட் வெரி ஸ்வீட். - **எல்.ஹரிபாலசுப்ரமணியம், திருக்களூர்** ● வரலாறு பகுதியில் 'கண்டுபிடிப்புகளின் நூற்றாண்டு' தகவல்கள் வியப்பில் ஆழ்த்தின. - **ஜி.அப்துல்பாரி, பழனி** ● காட்டில் குழந்தை பிறந்தது நெடுங்கவிதை சூப்பர். காட்டில் உள்ள ஒவ்வொரு விலங்குக்கும் கொடுத்த அடைமொழி நன்றாக இருந்தது. கடைசியில் ஒற்றுமையால் உயர்வு உண்டு என்று முடித்திருப்பது அருமை. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை**



விடையைச் சொல்; பரிசை வெல் - 30

1. உலகின் மிகக் குளிர்ச்சியான இடம் ....

2. ஏரி மாவட்டம் என்று அழைக்கப்படுவது ....

3. ஏற்றப்பாட்டைக் கேட்கக் காத்திருந்த கவிஞர் ....

4. 'பாங்க் ஆஃப் மைசூர்' உருவாகக் காரணமானவர் ....

5. பிளேட்டோவின் குரு ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

பரிசு ரூபாய் 1000/-



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.12.2009

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1376


1377


1378


1379


1380


1381


1382


1383


1384


1385


1386


1387


1388


1389


1390


1391


1392


1393


1394



1395


1396


1397


1398


1399


1400

றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

